370

பொன்னி

PONNI 10-10-51

சிறந்த கதை விருந்து

சிறுகதைகள்

தாஜ்மஹால்	...	நா. பாண்டுரங்கன்	...	0–8–0
வீடும் விளக்கும்	...	சுகி	...	0–8–0
நினைவுச் சின்னம்	...	இளமைப்பித்தன்	...	1–0–0
கடல் முத்து	...	எஸ். ஆறுமுகம்	...	1–0–0
உலக அரங்கில்	...	டி. கே. சீனிவாசன்	...	1–0–0
இன்பக் கனவு	...	இராதாமணாளன்	...	0–12–0

நாவல்கள்

அழகு நிலா	...	ரா. தணலன்	...	1–0–0
முகராத முல்லை	...	ஸி. ஆர். நரசிம்மராஜ்	...	2–0–0
இன்ப இரவு	...	ராஜகுமாரி	...	0–8–0
இன்ப லாகிரி	...	ஸ்ரீராம்	...	0–8–0
கருப்பு முல்லை	...	ஜெகசிற்பியன்	...	0–8–0
லட்சியப் பாதை	...	க. நாராயணன்	...	2–0–0

ரூ. 5-க்கு மேற்பட்ட ஆர்டருக்குத் தபாற் செலவு இலவசம். விவரமான விலைப்பட்டியலுக்கு எழுதுக.

பொன்னி லிமிடெட் :: சென்னை-21

பொன்னி பொருளடக்கம்

மலர் 5 | அக்டோபர் 10, 1951 | இதழ் 15

திருவள்ளுவர் ஆண்டு 1982 புரட்டாசித் திங்கள் 24-ம் நாள்

சிந்தனைக் கண்டிரோல்	...	ராம்நாத் கோயங்கா	1
ஆகாத காரியம்	....	கார்ட்டூன்	2
காங்கிரஸ் சீர்திருத்தம்	....	தலையங்கம்	3
காலமும் கருத்தும்	---		5
ஆடும் மாடும்	....	டி. கே. சீனிவாசன்	9
சதாசிவப் பண்டாரத்தார்	....	மு. அண்ணாமலை	17
இரவில்....	...	நா. பாண்டுரங்கன்	23
ராஜா ராணி	....	தங்கமணி	36
களங்கம்	....	ஏ. எஸ். ராகவன்	42
நியாயந்தானே ?	....	வி. துரைசாமி	50
நமக்குள்ளே	....	சுகி	52
யாருக்கு உங்கள் வாக்கு ?	....	கடிதங்கள்	57
வளரும் இலக்கியம்	....	நாஞ	60

சிந்தனைக் கண்டிரோல்!

இந்தப் பத்திரிகை மசோதா ரொம்ப மோசமானது. இதைப் போன்றதை நான் எங்கும் கண்டதில்லை. யாரோ ஒருவன் செய்த குற்றத்துக்கு வேறு யாரோ ஒருவன் தண்டம் பொறுக்கவும், பத்திரிகைகள்மீது அதன் சக்திக்கு மீறி ஜாமீன் தொகை கேட்டு அப்பத்திரிகைகளை ஒழித்துக் கட்டவும், இக்காரியம் செய்வதை நினைத்துக்கொண்டுதான் இந்தப் பத்திரிக்கை இப்படி எழுதியிருக்கிறது என்று ஒருவனின் எண்ணத்தைப் பற்றியே ஜோஸ்யம் கூறுவதாகவும், இம்மசோதாவில் பல ஷரத்துக்கள் அடங்கியிருக்கின்றன. உள்நாட்டிலாகா மந்திரி சிந்தனையையே கண்டிரோல் செய்யவிரும்புகிறார்...

[பார்லிமெண்டில் பத்திரிகை மசோதாவைப் பலமாக எதிர்த்துப் பேசுகையில் திரு. ராம்நாத் கோயங்கா இவ்வாறு விவரித்தார்.]

ஆவணக் காப்பக
19780
00 008

காங்கிரஸ் சீர்திருத்தம்

இந்திய முதலமைச்சர் நேரு, காங்கிரஸ் கட்சியைச் சீர்திருத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார். காங்கிரஸ் காரியக் கமிட்டியை மாற்றியமைத்தார்; ஊழல்களுக்குக் காரணமாயிருந்த

வர்களென்று கருதப்பட்ட காங்கிரஸ் பொதுச் செயலாளர்களை வெளியேற்றினார்; தமக்கு நம்பிக்கையுள்ள புதுச்செயலாளர்களை நிய மனம் செய்தார். அத்துடன் அவர் முயற்சிகள் நின்றுவிடவில்லை. பிரதேச தேர்தல் கமிட்டி களுக்கு ஆலோசனைகளைப் பேச்சு வடிவிலும் சுற்றறிக்கையாகவும் அனுப்பியவண்ணம் இருக்கிறார். அந்த ஆலோசனைகள் காங்கிரஸ் அபேட்சகர்களாக நிற்போரின் குண நலன்களை வரையறுக்கும் முறையில் அமைந்துள்ளன. நாணயஸ்தர் கள், திறமையுள்ளோர், முற்போக்கான கருத்துடையோர்—இப் படிப்பட்டவர்களையே காங்கிரஸ் தம் கட்சிச் சார்பில் நிறுத்த வேண்டுமென்பது நேருவின் அவா. அந்த ஆவலை நிறைவேற்றித் தரும்படி பிரதேசக் கமிட்டிகளை எச்சரித்துக்கொண்டே இருக் கிறார். பிரதேசக் கமிட்டிகள் தங்கள் வேலைகளை அரைகுறை யாக முடித்திருக்கின்றன. நேருவின் எச்சரிக்கை தேர்தல் கமிட்டி களை ஒரு கலக்குக் கலக்கியிருப்பதென்னவோ உண்மைதான்! மத்திய தேர்தல் கமிட்டி சிபாரிசுகளையும், அவைபற்றி வரும் புகார்களையும் கவனமாகப் பரிசீலனை செய்யும் என்றும் கூறப் படுகிறது. இந்தப் பரிசீலனைகள் ஒழுங்காக நடைபெறக் கமிட்டி களும் ஆலோசகர்களும் ஏற்பட்டபடி இருக்கின்றனர்; மேலும் நேருவே காங்கிரஸ் அபேட்சகர்கள் பரிசீலனையில் தனிப்படக் கவனம் செலுத்துவார் என்றும் தெரிகிறது. இச்செய்திகளைப் பார்க்கும்போது நேரு, காங்கிரஸைத் தூய்மைப்படுத்த மனப்பூர்வ மாய் முயல்கிறார் என்றே தெரிகிறது! ஆனால் அவர் முயற்சிகள் எவ்வளவு தொலை வெற்றியடையும் என்பது ஆராய்ச்சிக்குரிய செய்தியாகும்.

காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக மாறிய பிறகு அக்கட்சியில் தொண்டு மனப்பான்மை அடியோடு செத்துவிட்டது; தொண்டர் களாக விளங்கியவர்கள், காங்கிரஸைக் கட்டிக்காக்க அரும் பாடு பட்டவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்; விடுதலை கிடைத்த பிறகு, காங்கிரஸ் உல்லாச வாசிகளின் ஸ்தாபனமாகி விட்டது. பிரிட்டிஷ் ஆட்சியைத் தாங்கி நின்றபெரும்பாலோர், ஆட்சி, காங்கிரஸ்கார் கள் கையில் மாறியவுடன், தாங்களும் காங்கிரஸ்காரர்களாக மாறி விட்டனர். அந்தப் புதுவெள்ளத்தில் பழைய ஊழியர்கள் ஒதுக்

சப்பட்டுப் போனது வியப்பல்ல. எந்தக்கட்சி ஆட்சியிலிருந்தாலும் நாட்டாண்மை-ஒரே வகுப்பாரிடம்தான் இருக்கிறது; அவர்கள் 'சட்டையை' மாற்றிக்கொள்ளுகிறார்களே ஒழிய, உள்ளப்போக்கு மாறுவதில்லை. 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்ற கதை ஆண்டாண்டுகாலமாக நீடித்து வருகிறதென்பதற்கு இது போது மான சான்றாகும். இந்நிலையில் காங்கிரஸ், நேர்மையாளர்களை, திறமைசாலிகளை, முற்போக்கு எண்ணமுடையோரைத்தேடுவதும் அவர்கட்டு மாலைசூட்டுவதும் 'கற்பனை'யில் நிகழலாமேயொழியக் காரியத்தில் வரக் கூடியதல்ல. நேரு சொல்கிறார்; காமராஜர் ஆமோதிக்கிறார்; பக்தவத்சலம் 'அதுதான் சரி' என்றுபின் மொழி கிறார்; பொதுமக்களும் விரும்புகிறார்கள். ஆனால் இவை சொல் லளவில்தான் என்பதைப் பொதுமக்கள் மறந்துவிடக் கூடாது' ஒவ்வொரு மாவட்டத்திலும் செல்வாக்குள்ளவர்களாக, பணம் படைத்தவர்களாக, அதிகாரிகளை ஆட்டுவிக்கும் சூத்திரக்கயிறு வைத்திருப்போராக விளங்கும் பெரிய மனிதர்கள் எல்லோரும் காங்கிரஸ் டிக்கட் வேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறார்கள். பெரிய போட்டா போட்டிக் கிடையே 'நன்கொடைகளை'த் தாராளமாக அள்ளி வழங்குகிறார்கள். இந்த நாட்டாண்மைக் காரர்களை ஒதுக்கிவிட்டு நல்லவர்களை, நாணயமானவர்களை, 'கள்ளச் சந்தை' என்றால் 'அஃதேதோ? எங்குளதோ? அறியேனே!' என்றுமொழிபவர்களைக் காங்கிரஸ் தேர்தல் கமிட்டி யார் நிறுத்துவார்கள் என்று எதிர்பார்ப்பது இயற்கைக்கு மாறு பட்ட நம்பிக்கையாகும், புலி புல்லைத் தின்னும் என்று நம்புவது போலத்தான்!

எனவே 'யோக்கியர்களை நிறுத்துங்கள்' என்ற நேரு ஆலோ சனை, அதனைப் பின்பற்றுவதாகத் தேர்தல் கமிட்டியார் நடிப்பது அனைத்தும் பொதுமக்களை ஏமாற்றத்தான்! காங்கிரஸுக்கு நேர்ந்து விட்டகளங்கத்தை, பழிச்சொல்லை மாற்ற இந்தப் பிரசாரத்தைப் பயன்படுத்துகிறார்கள்! அவ்வளவுதான்! கையில் கன்னக் கோலும் வாயில் 'சிவ சிவா' என்ற உச்சரிப்பும் கொண்ட கபடர்களின் போக்குக்கும் இன்றைய காங்கிரஸ் பெரிய வர்களின் போக்குக்கும் சிறிதும் வேறுபாடு இல்லை!

நேரு உண்மையாகக் காங்கிரஸைத்திருத்த ஆசைப்படுவது நமக்குத் தெரிகிறது; ஆனால் அதே சமயத்தில் அவர் தம் ஆசை நிறைவேறாது என்பதும் நமக்குத்தெரிகிறது. ஆகவே காங்கிரஸ் சீர்திருத்தம் என்பது நாய்வாலை நிமிர்த்தும் முயற்சியாகவே முடியப்போகிற தென்பதையும் பொதுமக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்; அப்போது தான் தேர்தலில் அவர்கள் தங்கள் வாக்குகளைச் சரிவரப் பயன்படுத்த முடியும்!

காலமும் கருத்தும்

சீனக் குடியரசு

சீனமக்கள் குடியரசின் இரண்டாண்டு நிறைவு விழா அக்டோபர் முதல் நாளன்று சிறப்பாக நிகழ்ந்திருக்கிறது! சீரழிந்த சீனா எப்படிக் குறுகிய காலத்திற்குள் தம் சீரழிவுகளைப் போக்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்திய மக்கள் இச்சமயத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும். மக்கள் எண்ணிக்கை பெருகியுள்ள நாடுகளில் சீனாவும் இந்தியாவும் சமநிலையில் நிற்கின்றன. எனவே சீனாவுக்குள்ள பல பிரச்னைகள் இந்தியாவுக்கிருப்பது இயற்கை! மூட நம்பிக்கையும் அயல் நாட்டார் சுரண்டலும், பிற்போக்கான பொருளாதாரக்கொள்கையும் சீனாவைச் சியாங்கேஷேக் வடிவில் அலைக்கழித்தன; அந்தக் குழப்பத்திலிருந்து விடுபட்டு, எழுச்சி பெற்று இன்பம் நிறைந்த சீனா, மாசேதுங் தலைமையில் ஆசியாவின் சுடரொளியாக விளங்குகிறது. சீனாவுக்கு ஏற்பட்டிருந்த சிக்கல்கள் கொஞ்சம் ஏறத்தாழ நமக்கும் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களை விடுவிக்க விரும்பினால் 'சீனக் குடியரசை' இங்கேயுள்ள தலைவர்கள் சற்று ஆற அமர நோக்க வேண்டும்; அவர்களடைந்துள்ள வெற்றி நமக்கும் வழிகாட்டியாக விளங்கலாமல்லவா?

பத்திரிகை மசோதா

உள்நாட்டு அமைச்சர் ஆச்சாரியாரின் 'அரிய சாதனை'யான பத்திரிகை மசோதா சட்டமாகிவிட்டது; பத்திரிகை மன்னர்கள், வீராதி வீரர்கள் எப்படி யெப்படியோ எதிர்த்தார்கள்; ஆனாலும் ஆச்சாரியார் நினைத்தபடி மசோதாவை நிறைவேற்றி வைத்துவிட்டார்; ஒரே ஒரு திருப்தி தரும் திருத்தத்தோடு, அம்மசோதா நிறைவேறியிருக்கிறது. அந்தச்சட்டம் இரண்டாண்டுக் காலம் மட்டும்தான் அமுலில் இருக்கும் என்பது தான் அது! நிரந்தரக் கொடுமையாக அமையாமல் 'காலவரையறை' செய்திருப்பது சற்று ஆறுதலளிக்கிறது. என்றாலும் தேர்தல் சமயத்தில் இதனை நிறைவேற்றியிருப்பது பேச்சுரிமை, எழுத்துரிமை விரும்புகின்ற நாட்டு மக்களை அவமதிப்பது போலவே இருக்கிறது. சர்க்காரின் தவறான போக்கைக் கண்டிக்கும் உரிமை பத்திரிகைகட்கு மிக அவசியம். தனி மனிதனை விடப் பத்திரிகை வலிமை வாய்ந்தது; தனி மனிதர் பலர் சேர்ந்து கண்டிப்பதற்குப் பதிலாகப் பத்திரிகை அவர்களின் பிரதிநிதியாக நின்று கண்டிக்கிறது! தனி மனித உரிமையை வழங்கும் அரசாங்கம், பல தனி மனிதர்களின் பிரதிநிதியாக

விளங்கும் பத்திரிகையின் உரிமையைப் பறிக்க நினைப்பது விந்தைதான்! பத்திரிகையுலகில் பெரியவர்களாக விளங்குகிறவர்கள், தலைவர் என்றும் ஆசிரியர் என்றும் மகுடம் சூட்டிக் கொண்டிருக்கிறவர்கள், இம் மசோதாவை எதிர்த்து என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்களென்பது புரியவில்லை; அவர்கள் வெறும் வாய்ப்பேச்சு வீரர்களாகவும் எழுத்து வீரர்களாகவுமே இருந்து விடுவார்களானால், பத்திரிகை மசோதாவை எதிர்த்து நாடெங்கும் எழுந்த பலத்தகூக்குரலுச்குப்பொருளே இல்லை என்றுதான் பொதுமக்கள் கருதுவார்கள்! பத்திரிகையாளர்கள் ஆலோசிப்பார்களாக.

இந்து சட்ட மசோதா!

தேவையற்றது நிறைவேற்றப் படுவதும், தேவையானது ஒதுக்கப்படுவதும் இந்திய பார்லிமெண்டில் சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டன. பத்திரிகை மசோதாவை விடாப்பிடியாக நிறைவேற்றிய பார்லிமெண்ட், அம்பேத்காரின் இந்து சட்ட மசோதாவை ஒதுக்கி வைத்தது விந்தைதான்! ஒதுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தலைவரல்லவா அம்பேத்கார்! அதனால் தான் போலும் அவருடைய மசோதாவை ஒதுக்கிவிட்டார்கள், காங்கிரஸ் பிரமுகர்கள்! சிறு அளவில் நிறைவேறுமென்று எதிர்பார்த்ததும் நிறைவேறாமல் புகைந்துபோனது நேருவே வெட்கப்பட வேண்டிய செய்தியாகும்; இப்படி ஒதுக்கிய பிறகு நேரு 'இம்சோதா என் மசோதா' என்று பேசுவது முற்போக்காளர்கள் கண்ணில் மண்ணை அள்ளித் தூவத்தான்! முற்போக்கு எண்ணம் நேருவுக்கு உண்மையிலே இருக்குமானால், இந்துசட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு இருக்க வேண்டும்; அதனை விடுத்து வீறுப்புப் பேசுவது, பிற்போக்காளர்களின் கைப் பாவையாக நேரு விளங்குகிறார் என்பதைத்தான் தெளிவாகக் காட்டுகிறது. அம்மசோதா கைவிடப்பட்ட செய்தியைப்பெரும்பாலான பத்திரிகைகள் வரவேற்றிருப்பதும் பழமையாளர்களுக்குள்ள செல்வாக்கையே புலப்படுத்துகிறது! இந்து சட்ட மசோதா வீழ்ச்சி முற்போக்காளர்கட்கு ஒரு எச்சரிக்கை!

சின்னப்பா மறைவு

சினிமா உலகில் புகழ்பெற்று விளங்கிய நடிகமணி சின்னப்பாவின் மறைவுச் செய்தி கலையுலகையே ஒரு பெரிய கலக்குக் கலக்கிவிட்டது. காரணம் கலையுலகில் சின்னப்பா வகித்துவந்த இடம் அத்தனைச் சிறப்பாக விளங்கியதுதான்! திரைப்பட உலகில் புகழ்பெற்ற நடிகராக அவர் விளங்குமுன்பே, நாடக உலகில் அவர் ஒளிவீசிச் சிறப்புற்றிருந்தார்! 'கட்டையும் மரமும் நன்கு நடித்தன' என்று சினிமா விமரிசனம் வந்த காலத்திலெல்லாம்கூடப் புதுக்கோட்டைச் சின்னப்பா நல்ல குணசித்திர நடிகராகப் பிரகாசிக்க முடிந்தது!

தமிழ் மக்களின் அன்புக்குரிய நட்சத்திரமாக விளங்கிய நடிகர் சின்னப்பாவின் மறைவால் துயருறும் அவர் குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கித்வாய் விளையாட்டு

அரசியல் ஒரு சூதாட்டமென்பதைக் கித்வாய் கடந்த இரண்டு மூன்று மாதங்களில் நன்கு விளக்கிவிட்டார்; அவர் காங்கிரஸைவிட்டு வெளியேறியதும், பிரஜா கட்சி அமைத்ததும், இடையில் தோழர்களைத் தவிக்கவிட்டுக் காங்கிரஸுக்குத் திரும்ப ஓடியதும் ரசிக்கத்தக்க நல்ல அரசியல் விளையாட்டுக்களே! இந்த விளையாட்டரங்கத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கும் பொதுமக்கள் சந்தர்ப்பவாதிகளான கித்வாய் போன்றவர்கட்கு வரப்போகும் பொதுத்தேர்தலில் சரியான பாடம் கற்பிக்கத் தயங்கமாட்டார்கள் என்று உறுதியாக நம்பலாம். கித்வாய் போன்றவர்கட்கு இருக்கும் 'செல்வாக்கு' எவ்வளவு ஆபத்தானது என்பதையும் இந்த விளையாட்டு நன்கு தெளிவுபடுத்துகிறது.

கூனூர் ஆராய்ச்சிசாலை

கூனூரில் உணவுச் சத்து ஆராய்ச்சிசாலை ஒன்று நெடுங்காலமாக நடந்து வருகிறது; பிரிட்டிஷ் ஆட்சியில் நிறுவப்பட்ட அந்த ஆராய்ச்சிசாலை பல பயனுள்ள பணிகளைச் செய்து முடித்திருக்கிறது. கண்டதைத் தின்று வயிற்றை நிரப்பும் மக்கள் வாழும் நாட்டில் உணவுச் சத்து ஆராய்ச்சி எத்துணை அவசியம் என்று கூறவேண்டியதில்லை. விடுதலைபெற்ற காங்கிரஸ்காரர்கள் அதிகாரங்களை டில்லிக்கு மாற்றிக்கொண்டது போல, ஆராய்ச்சிசாலைகளையும் சென்னையைவிட்டு அகற்ற நினைக்கிறார்கள்! உணவுப் பொருளைப் போதிய அளவு சென்னைக்குத் தர மறுக்கும் டில்லி ஆட்சி, உணவுப் பொருள் ஆராய்ச்சி கூடச் சென்னையில் நடக்கக்கூடாதென்று நினைப்பதில் வியப்பில்லை. இந்த ஆராய்ச்சிசாலையை ஹைதராபாத்துக்கு மாற்ற என்ன அவசியம் நேர்ந்திருக்கிறதென்பது புரியவில்லை. சென்னை சர்க்காரும், புதிய சுகாதார அமைச்சரும் 'உணவுப் பொருள் ஆராய்ச்சிசாலை'யைப் பறிகொடுத்து விடாமல் எச்சரிக்கையாயிருப்பார்களென்று நம்புகிறோம்!

தோற்றம்

'பொன்னி' ஓவியர் கண்ணன் அவர்களின் துணைவியார் 26-9-51 புதன்கிழமை அன்று ஒரு ஆண் மகவுக்கு அன்னையானார் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அக்டோபர் 15-ல் எங்கும் கிடைக்கும்

விருந்து
இலக்கிய வரிசை

3

யாமதா ககாஷி வரைந்த ஜப்பானியக் கதை

துன்பக்கேணி

★

தனிப்பிரதி அணா 8 -தொடர்ந்துவரும் 12
புத்தகங்கள் அனுப்பக் கட்டணம் ரூ. 6—0—0

நான்காவது புத்தகம்: துவிஜேந்திரலால் ராய்
எழுதிய வங்காளி நாடகம்: நூர்ஜஹான்

விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட் — சென்னை-21

ஆடும் மாடும்

டி.கே. சீனிவாசன்

நடந்த கதை

பிள்ளைப்பிராயம் இணைத்துவைத்த பிணைப்பில் விளைந்த 'காதல்' தொடர்பைத் 'தாம்பத்ய' வாழ்வாக மாற்றியமைத்துக்கொள்ள 'வேளை'க்கு எதிர்நோக்கி இருந்தனர் சேகரன்—சக்கு இருவரும். அவன் ஓவியன் ; அவள் அவனுடைய காவியக் கன்னி.

சோமு, சேகரனின் நண்பன். விசித்திரப் பிறவி. மனமிடிந்து போனவன் வாழ்க்கையில் விசித்திரமாக்கப்பட்டான், முன்பின் தெரிந்திராத 'பெண்' ஒருத்தி அவன் வழியில் குறுக்கிடு கிறாள். அவள் வாழ்வில் சோமுவைக் குறுக்கிடச் செய்தது இச்சந்திப்பு.

அன்று சக்கு, தன் அத்தான் சேகரனுக்கு உணவு கொண்டு சென்ற சமயம், அவன் சாப் பாட்டை வைத்துப் போகச் சொல்லவே, அவள் தளர்ந்த நெஞ்சுடன் திரும்பினாள். அப் பொழுது சோமுவும் அவனைத் தொடர அப்பெண்ணும் வந்தனர். மோகனாவைச் சேகரனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறான் சோமு.

'இப்புது நட்பு அத்தான் போக்கிலே எதுவரை கொண்டு நிறுத்துமோ ?' என்று பலவாறு எண்ணமிட்ட சக்குவின் பெண் மனத்திலே கிளம்பிவிட்ட சந்தேகப் புயலுக்கு ஏற்ப, சேகர னின் 'கண்'ணும் அப்பெண் மோகனாமீது பதிந்திருப்பதைச் சக்கு பார்த்துவிட்டாள், அத் துடன் அவளுக்கு மோகனா 'துணை'யாக்கப்பட்டாள் சேகரனின் ஏற்பாட்டின்படி.

அடுத்த நாள் சேகரனிடம் சோமு, ஒருநாளிரவு மோகனாவின் உடலைப் பணயம் வைத்தால் யாரோ நாடகக் கம்பெனி தொடங்கப் பணம் தருவதாகக் கூறியதையும், அதற்கு இவன் இணங்கியதையும் விவரித்தான். சேகரன் திகைத்துப் போனான், சோமுவுக்கு எவ்வளவோ 'புத்தி' சொல்லியும் சோமு உடன்படாதது ஒரு புதிராகப் பட்டது சேகரனுக்கு.

மோகனா இருக்கும் வரை அத்தானின் அன்பு தனக்குக் கிட்டாதோ என்று ஐயப்பட்ட சக்கு அவளிடம் ஓடி ''என்னை மோசம் செய்துவிடாதே, அக்கா'' என்று கால்களை இறுகப் பற்றிக் கொண்டாள்,

''நானும் உன்னைப்போல ஒரு பெண்தான் சக்கு'' என்று மோகனா கூறவே, அச்சொற்கள் சக்குவுக்கு உள்ளம் நிறைந்த ஆறுதலளித்தன !...

ஐந்தாம் அத்தியாயம்

மனித இதயம் ஒரு அற்புத மான இசைக்கருவி. உணர்ச்சி கள் அதில் தந்திகளாக இருந்து ஒலிகளை எழுப்புகின்றன. அதி லிருந்து கிளம்பும் இசையில்தான் எத்தனை வகைகள்! கொஞ்சி விளையாடும் இந்தோளம்...குது கலத்தை அள்ளிக்கொட்டும் கல் யாணி...மகிழ்ச்சியோடு மனநிம் மதியையும் ஒன்று கலக்கும் மோகனம்......நெகிழ்ந்து நெக் குருகச் செய்யும் வசந்த பைரவி! ஆனால்...? முகாரியே முழுநேர இசையாக எழுந்து இன்னலைக் கொடுப்பதும் உண்டு. ஏன்...? நினைவுகளும் நிகழ்ச்சிகளுந்தான் அதை இயக்கித் தொலைக்கின் றன. அறிவு மட்டும் இயக்குவ தாக இருந்தால்...!

சேகர்—சக்கு—வாசு! இந்த முக்கோணத்தைச் சதுரமாக்கிய சோமு! எப்படியோ உருவான ஒரு சூழ்நிலை இவர்கள் இதயங் களைத் தன் விருப்பம்போல இயக்கித் தொல்லை கொடுத்தது. ஏன் எழுகிறது முகாரி? அவர் கள் நால்வருக்குமே இந்தச் சந்தேகம் எழுந்தது. ஆனால் அதற்குக் கிடைத்த விளக்கம்... "மோகனா" பரிதாபத்துக்குரிய அந்தப் பெண்ணுக்கோ தன்னைச் சுற்றிப் படர்ந்துவரும் இருளை உணர்ந்துகொள்ள முடியவில்லை. மாலை நேரந்தான் — அதுவும் லேசாக மங்கிக் கிடக்கிறது என்றுதான் நினைத்தாள். அந்தகாரத்தின் முழு உருவமும் தன்னைச் சுற்றி மண்டிவிட்டது என்பது அவளுக்குத் தெரியவே இல்லை!

அப்போதெல்லாம்......அவள் வீதியிலே கிடந்தபோது...... வாழ்வுப் பிரச்னையை விட வயிற்றுப் பிரச்னைதான் அவளை ஆட்டிவைத்தது. இரவெல்லாம் விழிப்பு—பகலெல்லாம் உறக்கம்! எத்தனையோ பேரிடம் அடவு போயிருக்கிறாள். கெஞ்சுபவர் கள்—கொஞ்சுபவர்கள்—கோபிப் பவர்கள்—குரங்காக ஆட்டிவைப் பவர்கள்! பசிதான் இவளை அவர்களிடம் போகச் செய்தது— அதே பசிதான் அவர்களையும் இவளிடம் வரவழைத்தது! வெறிபிடித்த ஆண்களும்— விவஸ்தையற்ற தரகர்களும்! இதனால் அவள் உடல் தேய்ந் தது—உள்ளமும் வளராமலே போனது! புழுவாக ஊர்ந்த அவள் இப்போது சிலருடைய வாழ்வில் புயலாக வீசுகிறாள் என்ற உண்மை மட்டும் அவ ளுக்குத் தெரிய நேர்ந்தால்...! ஆச்சரியம் அடைந்தாலும் அடைவாள் — இல்லாவிட்டால், அகங்காரம் ஏற்பட்டாலும் அதில் ஆச்சரியப்பட ஏதும் இல்லை!

வீட்டுக்கும் வீதிக்கும் இடை யிலே உள்ள வேற்றுமை மோகனாவுக்குத் தெரியவந்தது. கண்டபடி திரியும் காட்டு விலங்குகளிடமிருந்து தப்பத் தான் பெண் குடும்பம் என்ற

அமைப்புக்குள் தன்னைக் கட்டுப் படுத்திக்கொண்டு அடிமையாகி விட்டாளோ என்றுகூடச் சந்தேகப்பட்டாள். மறைந்து போன வாழ்வை அவள் நினைத்துப் பார்த்தபோது...! வாய்க்குள் இருக்கும்வரை தான் எச்சில் வயிற்றின் உழைப்பைக் குறைக்கும் சாதனமாக இருக்கிறது. ஒரு தடவை அதை வெளியில் துப்பிவிட்டால்...அதை வைத்திருந்தவனுக்கே தோன்றும் வெறுப்பும் அருவருப்பும்......! வெட்கப்பட்டாள் – வேதனை அடைந்தாள் — வெறுத்தாள்— மறுபடியும் அந்நிலை வந்துவிடக் கூடாதே என்று ஏங்கித் தவித்தாள்!

அன்று மாலை ஐந்து மணியிருக்கும். ஜன்னல் வழியாக வீதியையே கவனித்துக்கொண்டிருந்தாள் மோகனா. காய்ந்து ஓய்ந்துபோன கதிரவன் தன் கடைசி வலையாக மஞ்சள் நிறக் கதிர்களை விரித்திருந்தான். பொழுது சாய்ந்துவிட்டது என்பதை அறிவிக்கும் நித்திய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து காட்சி அளித்தன. பூப்பொட்டலங்களைக் கையிலேந்திப் புன்னகை தவழும் முகங்களோடு வீடு நோக்கி நடக்கும் புதுமாப்பிள்ளைகள் – அலுத்துச் சலித்து அன்றைய வயிற்றுப்பாடு ஒருவிதமாக முடிந்தது என்ற ஆறுதலோடு வீடு திரும்பும் தொழிலாளர்கள் – விளையாட்டு மைதானத்துக்கு வெகு சீக்கிரம் திரும்பிவிட வேண்டுமே என்ற துடிப்பால் ஓட்டமும் நடையுமாக வீடு நோக்கி விரைந்து செல்லும் பள்ளிப்பிள்ளைகள் — வீட்டுக்குப் போனால், என்னென்ன விபரீதங்கள் காத்திருக்கின்றனவோ என்று வெறுப்பும் துக்கமுமாகத் தளர்ந்து செல்லும் குடும்பஸ்தர்கள்...! நெஞ்சு விரிந்து சுருங்கி அதில் நிறைந்திருந்த கவலையைக் காற்றோடு விரட்டி ஓட்டியது. மிருகக் காட்சி சாலையை மனிதர்கள் பார்க்கிறார்கள். ஆனால் இந்த மனிதக் காட்சிச்சாலையை மட்டும் மிருகங்கள் பார்க்க நேர்ந்தால்.....! மனதுக்குள்ளாகவே இதை நினைத்துச் சிரித்தாள் மோகனா.

எதிர்வீட்டில் இருந்த கன்று 'அம்மா' என்று அதன் தாயை அழைத்தது. உடனே பசு ஆசையோடு தன் சேயை நாவால் தடவிக்கொடுத்தது. குதித்துக் கொண்டு உள்ளே வந்து 'அம்மா' என்று கூவியழைத்த குழந்தையை எடுத்தணைத்து முத்தமிட்டாள் எதிர்வீட்டு மங்கை!

அவள் உள்ளம் சிலிர்த்தது. அதற்கு உயிரும் பிறந்தது! தோல் – சதை—நரம்பு – எலும்பு! இத்தனையும் எங்கோ மறைந்து இல்லாமலே போயின. அதன் பிறகும் ஏதோ ஒன்று எஞ்சியிருக்கத்தான் செய்தது. அது வானில் பறந்தது...நீரில் நீந்தியது....சோலையிலே கீதம்பாடி மகிழ்ந்தது! அது என்ன? எவருக்குமே புரியாத அது அவளுக்கும் புரியவில்லை!

'அக்கா!''

இந்தக் குரல்கேட்டுத் தன்னுணர்வு பெற்றுள் மோகனு. திரும்பினுள்; வாசு நின்று கொண்டிருந்தான். அன்பு துன்பமாக மாறும் அந்த இடைவேளை எப்படியிருக்கும் என்பது இது வரையில் அவளுக்குத் தெரியாது. அப்போதுதான் வாசுவின் முகத்தில் அதைக் கண்டாள்.

"இல்லை......சக்கு அக்கா என்று..." என்று வாக்கியத்தை

ஒடித்துச் சிதைத்துவிட்டு முடிக்காமல் கூடப் போகத் திரும்பினான் வாசு.

"வாசு!" என்றாள் மோகனா.

திரும்பி அவளைப் பார்த்தான் வாசு. அவன் விழிகளில் நிறைந்திருந்தது திகைப்பா அல்லது ஆச்சரியமா என்ற ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை, மோகனா. பயன்படுத்தாமல் பாழாகிக் கொண்டிருந்த அன்புணர்ச்சிகள் எல்லாம் உள்ளத்தை உடைத்துக்கொண்டு ஓடோடி வந்தன வெளியே. தடைப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ அவளால் முடியவில்லை. என்னென்னவோ பேச நினைத்தாள். ஆனால்...? சாவியை அதிகமாகக் கொடுத்துவிட்டால் ஓடாமல் நின்றுபோகும் கடிகாரத்தைப் போல, உணர்ச்சிகள் தொண்டையை அடைத்துக் கொண்டு பேசவிடாமல் தடுத்துவிட்டன.

சிறிதுநேரம் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான் வாசு. இவள் வந்தபிறகு எல்லோருக்கும் பித்துப்பிடிக்கச் செய்துவிட்டு, இவளும் பைத்தியக்காரியாகிவிட்டாளே என்ற எண்ணந்தான் தோன்றியது அவனுக்கு. அவன் உள்ளத்தில் நிறைந்திருந்த ஆத்திரம் சரிபாதி குறைந்து அனுதாபத்துக்கு இடம் கொடுத்தது. பேசாமல் திரும்பி அங்கிருந்து போனான்.

எரிவது மெழுகுவர்த்தியாக இருந்தால் மென்மூச்சே போதும் அதன் ஒளியை அணைத்துவிட. இறுகிப்போன உள்ளத்தை அவள் புகுந்த சூழ்நிலை இளகச் செய்துவிட்டதால் இந்த நிகழ்ச்சி அவள் விழிகளில் நீரை வரவழைத்து விட்டது.

"ஒடிந்துபோன உள்ளங்களுக்குத்தான் ஆதரவும் அனுதாபமும் தேவைப்படுகிறது, வாசு! உற்சாகம் நிறைந்தவர்களிடையே அவைகளைக் கொட்டிப் பாழாக்குவதில் பலன் என்ன இருக்கிறது?" என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

அந்தகாரம் அவளைத் தன்னிடையே ஏன் சிறை வைத்திருக்கிறது என்பது அவளுக்கு விளங்கவில்லை. எதுவும் நாம் நெருங்கினால்தான் நம்மை நெருங்கும் என்ற உண்மையை உணராதவளல்ல அவள். ஆனால்... உலகத்தை அவள் நெருங்குகிறாள். ஆனாலும் அது இவளை விட்டு ஒதுங்கியே போகிறது. அதைக் கட்டிப்பிடித்திழுக்கும் துணிவு மட்டும் இவளிடத்தில் உண்டாக மறுக்கிறது! ஏன்? ஆலோசனையோ அறிவுரையோ இல்லாமல் தனக்குத்தானே அந்த ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருந்தாள் மோகனா.

●

அன்றொருநாள். மத்தியானம் மூன்று மணியிருக்கும். உள்ளே சக்கு தூங்கிக்கொண்டிருந்தாள். சேகரன் வீட்டுக்கு வந்தான். அவன் பார்வையில் படாமல் தப்ப மோகனா எழுந்து உள்ளே நடந்தாள்.

"நில் மோகனா! உன்னைத் தான் தேடிவந்தேன். சோமு உன்னை அழைத்துவரச் சொன்னான்" என்றான் சேகரன்.

அப்படியே நின்றுவிட்டாள் மோகனா. அவளுக்கு எதுவுமே தோன்றவில்லை. சோமு என்ன சொல்லவந்திருப்பான்? மகிழ்ச்சியோடுதான் அவள் எதிர்காலத்தைத் தேடிவந்தாள். ஆனால் அவள் அடைந்திருந்த மாறுதல்...? மருட்சியைக் கொடுத்தது அவளுக்கு, அதைப்பற்றி நினைத்தபோது. செங்குத்தான மலைமேல் சிரமப்பட்டு ஏறி, அதன் உச்சியை நெருங்கும்போது, எதிரே ஒரு பெரிய பாறை நழுவிச் சருக்கி வந்தால்...ஆனால் வேறு வழி...? எதுவுமே புரியவில்லை அவளுக்கு. மௌனமாகச் சேகரனைத் தொடர்ந்தாள்.

ஆனால் அறையில் சோமு இல்லை. பயம் பற்றிக்கொண்டது அவளை. அன்று....முதல்நாள் சேகரனைச் சந்தித்தபோது அவன் பார்த்த பார்வை!

"அவர் எங்கே?" என்றாள்.

"எங்கேயாவது அலைந்து கொண்டிருப்பான். ஆனால்..." சேகரன் முடிக்கவில்லை; அதற்குள் மோகனா, "அப்படியானால் நான் வருகிறேன்" என்று திரும்பினாள் போக.

ஓடிவந்து குறுக்கே நின்று வழிமறித்தான் சேகரன். திடுக்கிட்டுத் திகைத்தாள் மோகனா. நள்ளிரவிலே நடுத்தெருவிலே இந்தமாதிரி நாடகங்கள் பலவற்றை அவள் பார்த்திருக்கிறாள்; ஆனால் நாகரிக உலகத்திலும் அதேபோல....ஆத்திரத்திலும் அவசரத்திலுமே உயர்ந்தவர்களைப் பார்த்துவிட்டு அளவுக்கு மீறிய மதிப்பு ஏற்பட்டுவிட்டது அவர்கள் மேல் அவளுக்கு. நிறுத்தி நிதானமாகப் பார்க்கும்போது...! ஆண் எங்கேயும் ஒரே மாதிரியேதான் இருந்து தொலைக்கிறான்! ஆனால் அவளுக்கு உள்ளம் அப்போது தான் உயிர் பெற்றிருந்தது. ஆகையால் பிழைத்த பிண்டத்தை மறுபடியும் பிணமாக்க

அவள் விரும்பவில்லை. வெறிச் சென்ற பார்வையோடு அவனையே பார்த்தாள்.

“மனதில் ஆபாசத்தை வைத்துக்கொண்டு உன்னை அழைக்கவில்லை, மோகனா! அழகை ஆராதிப்பவன் நான். நீ என்னோடு பேச வேண்டாம். இங்கேயே உட்கார்ந்திரு. பொங்கி வழியும் உன் அழகை அத்தனை பொருள்களிலும் படியவைத்து எழிலோவியங்களாக ஆக்கிக் காட்டுகிறேன், பார். சோமு உன்னை... மோகனா!.....சொல்ல எனக்கு மனம் கூசுகிறது. குட்டிச்சுவராக்கத் திட்டமிட்டிருக்கிறான். இணங்காதே, மோகனா! தயவு செய்து, எனக்காக வேண்டுகிறேன், அவன் என்ன சொன்னாலும் கேட்காதே! என்ன சொல்கிறாய் மோகனா?” என்று சொற்களைக் கொட்டினான் சேகர்.

மோகனாவுக்குத் திடீரென்று பழைய நிகழ்ச்சியொன்று நினைவுக்கு வந்தது. அன்று சக்கு, வாசுவைப் பார்த்து, “நான் அழகாயிருக்கிறேனா?” என்று கேட்டாள். அக்காள் தம்பியைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்பதாய் இருந்தால், அவள் அழகாய் இல்லாதது எவ்வளவு மனத்துடிப்பை உண்டாக்கி இருக்க வேண்டும்? உடனே ஓடிப்போய் சக்குவை அழைத்து வந்து, “நீ அழகாயில்லை, சக்கு. அதனால் அவதிப்படுகிறாய். நான் அழகாயிருக்கிறேன். என்னைப் புந்தான் அவதிப்படுத்துகிறார்கள்” என்று சொல்லலாமா என்றுகூட நினைத்தாள்.

“என்ன மோகனா சொல்லுகிறாய்? சோமு எதும் செய்துவிடுவான் என்று பயப்படுகிறாயா? நான் பார்த்துக்கொள்ளுகிறேன். என்னுடனேயே இருந்துவிடு. நானே வேண்டுமானால் உன்னை...” எப்படி முடிப்பது என்று திகைத்தான் சேகர்.

மோகனாவின் மனதுக்குள்— என்னை ‘மோசம் செய்துவிடாதே அக்கா!’ என்ற குரல் ஒன்று கேட்டது. அவள் பார்வைக்கெதிரே இன்பமயமான எதிர்காலம் ஒன்று காட்சி அளித்தது. ஏன் சேகரனை அவள் திருமணம் செய்துகொண்டு... முழு நிம்மதி...அலைச்சல், தொல்லை, அவதி எதுமிருக்காது.

“உண்மைதான்! எவரும் உங்களை எதும் செய்துவிட முடியாது. அப்படிச் செய்வதாக இருந்தாலும் நீங்கள் வாளாகி அவர்கள் வாழ்வைச் சிதைத்துவிடுவீர்கள். எனக்கும் கவசமாக இருந்து காப்பாற்றிவிடுவீர்கள்.”

காட்சிகளிலே இனிமையைக் கண்டு பழக்கப்பட்ட சேகரன் அன்றுதான் சொற்களிலே சுவையிருக்கக் கண்டான்.

“சொல் மோகனா, உனக்குச் சம்மதம்தானே” என்றான் மகிழ்ச்சியோடு.

“ஆனால் சக்கு துடித்துப் போவாள்!” என்று சொல்லி முடித்தாள் மோகனா!

தீட்டுபவனே சித்திரமாகிவிட்டான். சித்திரங்கள் சிரிக்கத்

தொடங்கின இதைப் பார்த்து. விளக்கைக் கொளுத்தும்போது காற்று அணைத்துவிட்டது. இனி அடுத்த நெருப்புக்குச்சியையும்...

"உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன் மோகனா. நீ மறுத்த பிறகு சக்குவை ஏற்றுக்கொள்ள என் மனம் இடங்கொடுக்காது; பித்தனாகிவிடுவேன். சிந்தித்துப் பார். அழகே! உன் அடிமையின் வேண்டுகோளை அலட்சியம் செய்யாதே!"

இதைச் சொல்லிவிட்டுச் சேகரன் மோகனாவின் கரங்களைப் பிடித்துக்கொண்டான். உணர்ச்சியேதும் இல்லாமல் அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள் மோகனா.

"என்ன சேகர்!" குரல் கேட்டுத் திரும்பினர் இருவரும். ஆனால் சோமு மட்டும் பேச்சை முடிக்கவில்லை.

"மகாபாரதத்தில் இந்தமாதிரி கட்டங்களைப் படித்திருக்கிறேன். துயிலைப் பற்றியிழுத்தவர்களே துச்சாதனனும் கர்ணனும்தான். துரியோதனன் மனைவி பானுமதியாக இருந்தால் எனக்கும் கோபம் வந்திருக்கும். ஆனால் இவள் திரௌபதி தானே..." என்று சொல்லிக்கொண்டே மோகனா இருந்த பக்கம் திரும்பினான் சோமு.

கையை உதறிவிட்டு வெளியே ஓடினாள் மோகனா உடனே. வீட்டுக்குள் நுழைந்ததும் சக்கு எங்கே என்று கவனித்தாள். அப்பொழுதும் அவள் தூங்கிக் கொண்டுதான் இருந்தாள்.

[தொடரும்]

வீட்டிலேயே அச்சடிக்கும் பாக்கட் பிரஸ்

பெயர், முகவரி, காகித லேபில்கள், ஹாண்டு பில்கள், நிகழ்ச்சிப் பத்திரங்கள் முதலியனவற்றை ஷை பிரஸில் நேர்த்தியாக அச்சடிக்கலாம். ஒவ்வொரு வீட்டுக்கும் இன்றியமையாதது.

நெ. 1. ரூ. 2-0-0 நெ. 2. ரூ. 2-8-0 ஸ்பெஷல் ரூ. 3-0-0 சிறந்த ரகம் ரூ. 3-8-0 பெரிய அளவு உயர்ந்தரகம் ரூ. 6-0-0 தபால் பாக்கிங் செலவு அணா 15.

உயர்ரகக் கைக்கெடிகாரங்கள்

ஸ்விஸ் தயாரிப்பு 12 ஹூ உத்தரவாதம் 5 ஜுவல் குரோமியம் கேஸ் வட்டஷேப் ரூ. 16—8—0 சிறந்தது ரூ. 17-8-0 நீண்ட சதுர குரோமியம் கேஸ் 7 ஜுவல் ரூ. 21-0-0. ரோல்டு கோல்டு 15 ஹூ உத்தரவாதம் 9 ஜுவல் ரூ. 25-0-0. சிறந்தது ரூ. 27-0-0 ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 26-0-0. சென்டர் செகண்ட் ரூ. 19-0-0. பாக்கட் வாட்ச் ரூ. 12-0-0. அலாரம் டைம்பீஸ் ரூ. 17-0-0. சிறந்தது ரூ. 19-0-0 தபால் செலவு ரூ. 1-4-0.

GREAT NATIONAL STORES

(P. P.) POST BOX NO. 12216.

CALCUTTA (5)

ஆராய்ச்சியாளர்

சதாசிவப் பண்டாரத்தார்

பேட்டிக் கட்டுரை:
மு. அண்ணுமலை

அண்ணுமலைநகர் பண்டிதர் குடியிருப்பிலிருந்து ஒரு வயதான மனிதர் கையில் ஒரு குடையைப் பிடித்துக்கொண்டு, 'தொப் தொப்' பென்று மெதுவாக அடியெடுத்துவைத்து நூல் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருப்பார்.

ஒட்டி உலர்ந்த உடல்—வழுக்கையான தலை—அதிலே ஒன்றிரண்டு மயிர்கள்—ஆராய்ச்சியாளர் சதாசிவபண்டாரத்தாரின் தோற்றத்தைப்பற்றி வர்ணிப்பதென்ருல் இப்படித்தான் எழுதலாம்.

வட இந்தியாவின் வரலாறே இந்தியாவின் வரலாருகக் கொண்டு, தென்ஞட்டின் சரித்திர உண்மைகளைக் கைவிட்ட நாளிலே, தமிழர்களின் வரலாறு ஆராய்வாரின்றி மறைந்துகிடந்த வேளையிலே, சிலர் கல்வெட்டுக்களின் துணைகொண்டு வரலாறுகளை எழுதத் தொடங்கினர்கள். அவ்வாறு எழுந்த நீண்ட வழியிலே சதாசிவப் பண்டாரத்தார் சென்ருர்; குறிப்பிடத்தக்க புகழை அடைந்தார்.

அவரைப் பேட்டி காணுவதற்காக நான் அவரது இல்லத்தை அடைந்தேன். என்னுடன் நண்பர் அக்கப்பன் வந்தார்.

ஆன்றமைந்த அந்த முதியார் இதழிலே புன்னகை சேர்த்து, கைகூப்பி வரவு காட்டினர். அவர் தோற்றம் தமிழின் அமைதிக்கு எடுத்துக்காட்டாக நின்றது.

★

நான்: பிள்ளையார் சுழியோடு சைவர்கள் எதையும் தொடங்குவார்கள் அல்லவா? அதைப்போல நானும் 'தங்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டா?' என்ற கேள்வியுடன் இந்தப் பேட்டியைத் தொடங்குகிறேன்.

அவர்: (சிரித்துக்கொண்டு) உண்டு.

நான்: மதத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அவர்: மதம் மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்ற கருத்தைத்தான் கொண்டிருக்கிறேன்.

நான்: கடவுள் நம்பிக்கை இல்லாதவனைப் பற்றி நீங்கள்

கருதுவதென்ன? அவனை நீங்கள் வெறுப்பதுண்டா? அவனிடம் திறமையிருந்தால் மெச்சி வரவேற்பீர்களல்லவா?

அவர்: ஒருக்காலும் வெறுக்க மாட்டேன். எப்பொழுதும் திறமைக்கு மரியாதை செய்வேன். அறிவுடைமை பொது வாயிற்றே!

நான்: இப்பொழுதிருக்கும் ஸ்ரீ ல ஸ்ரீ சன்னிதானங்கள் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் நன்மை விளைவித்திருப்பதாக நினைக்கிறீர்களா?

அவர்: இப்பொழுதிருக்கும் சன்னிதானங்களைத் தானே கேட்கிறீர்கள்! ஓரளவு......

நான்: 'ஓரளவு' என்றால் அவர்கள் செய்ததில் அவ்வளவு திருப்தியில்லை என்று தானே பொருள்?

அவர்: செய்தன குறைவு; இன்னும் நிறைய அவர்கள் செய்ய வேண்டும்.

நான்: பழம் பண்டிதர்களால் தமிழுக்கு வளர்ச்சி ஏற்படுமா? புதுமையாளர்களால் தமிழ் வளர்ச்சியுறுமா?

அவர்: இரு வகையினராலும். ஆக்கிய பழைய இலக்கியங்களைப் பண்டிதர்கள் காக்கிறார்கள். புதுமையாளர்கள் ஆக்குகிறார்கள். குற்றமற்ற மொழிநடையோடு கூடிய புதுமை நோக்கைத் தான் ஆதரிக்க வேண்டும்.

நான்: பழைமை — புதுமை; இவ்விரண்டில் உங்களை எந்த வகையில் சேர்க்கிறீர்கள்?

அவர்: எல்லாப் பழைமையும் நல்லன வென்றும் நான் சாதிப்பதில்லை. புதுமையே வேண்டாம் என்ற பிடிவாதமும் என்னிடம் இல்லை. இரண்டிலுமுள்ள நன்மையையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

நான்: பொதுவாக மனிதர்கள் வயதான பின்னர் பெரும்பாலும் சமயத்துறையில் உள்ளத்தை ஈடுபடுத்துகிறார்கள்; அரசியல், இலக்கியம் ஆகியவற்றினின்று விடுதலை பெற்று ஒதுங்கிவிடுகிறார்களே! அது போல் தாங்கள்........

அவர்: தமிழ்நாட்டிற்கும், தமிழ் இலக்கியத்திற்கும் நான் செய்ய வேண்டியன இன்னும் நிறைய இருப்பதாகவே நினைக்கிறேன். அந்தத் தொண்டு என்னை மகிழ்வித்தும், அதுவே பெருந்துணையாகவும் நிற்பதால் அதினின்றும் விலக விரும்பவில்லை.

நான்: சரி. சமயத்தில் நீங்கள் எந்த நெறியைக் கடைப்பிடிக்கிறீர்கள்?

அவர்: நான் தானே! சமயத் துறையில் அன்பு நெறியைத் தான் கடைப்பிடிக்கிறேன்.

நான்: சமயத்தில் சீர்திருத்தம் நுழைவது சரிதானா?

அவர்: புகத்தான் வேண்டும். சமயத்தில் சீர்திருத்தம் புகுந்து கொண்டுதான் வந்திருக்கிறது. அது வரலாற்று உண்மையாயிற்றே!

நான்: கல்வெட்டு, சாஸனங்கள், பண்டைய சிற்பங்கள் முதலியவற்றைக் கண்டுபிடித்து, வரலாற்று முறையை ஆராய்வதற்கு அரசாங்கம் நிறையத்



துணையும் வழியும் செய்திருக்கிறதா?

அவர்: அரசாங்கம் என்றால் இப்பொழுதிருக்கும் அரசாங்கத்தையா குறிப்பிடுகிறீர்கள்?

நான்: ஆமாம். இல்லையென்றால் நீங்கள் எதை குறிப்பிடுகிறீர்கள்?

அவர்: அப்பொழுதிருந்த அரசாங்கம் இந்தப் பழைய ஆராய்ச்சி சாதனங்களிலும், கலைப்பொருள் காப்பிலும் அதிகம் கருத்தூன்றியது. தென்னாட்டைப் பொறுத்த மட்டில் இப்பொழுதுள்ள அரசு வாளாதிருந்து வருகிறது. சகல ஆராய்ச்சியும் வடநாட்டில் தான் நடக்கிறது.

நான்: தங்களின் வாழ்க்கையை முழுவெற்றியாகக் கருதுகிறீர்களா அல்லது தோல்வியாக மதிப்பிடுகிறீர்களா?

அவர்: முழு வெற்றியாக...

நான்: வாழ்வில் அடைய வேண்டிய அனைத்தையும் தாங்கள் அடைந்து விட்டதாகத் திருப்தி அடைகிறீர்களா அல்லது அடையவேண்டுவன இன்னும் எஞ்சி யிருப்பதாக நினைக்கிறீர்களா?

அவர்: பெரும்பாலும் அடைந்துவிட்டதாகவே கருதுகிறேன்.

நான்: நீங்கள் செய்த தமிழ்த் தொண்டுகளுக்குத் தமிழ்நாடு தக்கதொரு வரிசை செய்திருக்கிறதா? முதலில் தமிழ்நாடு புரிந்துகொண்டாவது இருக்கிறதா?

அவர்: தமிழ்நாடு புரிந்து கொள்ளவில்லை என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது.

நான்: தாங்கள் இப்பொழுது அடைந்திருக்கும் பதவி தங்களுக்குப் பிடித்திருக்கிறதா?

அவர்: பிடிக்காமலென்ன? மகிழ்வாகவே இருக்கிறேன். சூழ்நிலை; இந்தப் பல்கலைக் கழகத்துக்கென அமைந்த பெரிய நூல்நிலையம்; நல்ல நண்பர்கள். எல்லாம் வாய்க்கப்பெற்றிருக்கும்போது என்ன குறைக்கு இடமிருக்கிறது?

நான்: நண்பர்களின் பெயர்களைக் குறிப்பிடுவீர்களா?

அவர் : இதோ, என்னருகே இருக்கும் இந்த வெள்ளைவாரணார், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, ஜி. சுப்பிரமணியபிள்ளை

நான் : இதைவிடப் பெரிய பதவி கிடைத்தால் என்ன செய்வீர்கள் ?

அவர் : அதை நான் எதிர் பார்த்தால்தானே!

நான் : இப்பொழுது இயங்குகின்ற அரசியல் கட்சிகளில் தமிழ்மொழிக்கு நன்மை செய்யக்கூடிய கட்சியாக எக் கட்சியைக் குறிப்பிடுகிறீர்கள்?

அவர் : (சிரித்துக்கொண்டே) மறுமொழி கூற முடியாதபடி கேட்டுவிட்டீர்களே. எக்கச் சக்கமான கேள்வி.

நான் : வரப்போகும் தேர்தலில் எத்தகைய கொள்கையுடைய அரசாங்கம் வெற்றிபெற வேண்டுமென்று விரும்புகிறீர்கள் ?

அவர் : தமிழே தாய்மொழியாக, தமிழர் நலமே தன்னலமாகக் கொள்ளும் அரசாங்கம் தான் தேவை.

நான் : தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் தமிழுக்கு ஆக்கந் தானே ?

அவர் : அதிலே சந்தேகம் என்ன !

நான் : தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தாங்கள் ஏதாவது யோசனை கூறுகிறீர்களா ?

அவர் : அறிவியல் நூல்கள் அதிகம் வரவேண்டும். தமிழுக் குழைத்தவர்கள், தமிழ்ப் புலவர்கள் ஆகியோருடைய வரலாறு சரியான முறையில் எழுதப்படவேண்டும். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்து சென்ற பெருமக்களான சுந்தரம் பிள்ளை, வி. கனகசபைப் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை, அரசஞ் சண்முகனார், பாண்டித்துரைத் தேவர், மாணிக்க நாயகர் இன்னும் பலரின் வாழ்க்கை வரலாறுகள் விரிவாக எழுதப்படவேண்டும்.

நான் : தமிழ் இலக்கியத் துறைக்குத் தாங்கள் செய்து கொண்டிருக்கும் தொண்டு என்ன ?

அவர் : எல்லாத் தமிழ்ப் புலவர்களின் காலத்தையும் சரியாக வரையறுத்துக்கூற முயன்று கொண்டிருக்கிறேன்.

நான் : இதுவரை......

அவர் : வரலாற்று நோக்கோடு ஆராய்ந்தபோது சுந்தரர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் முதலியவர்களின் காலத்தைத் தெளிந்தறிய வாய்ப்புக் கிடைத்தது. இதுவரையிலும் ஆராய்ச்சியாளர்கள் சுந்தரர் காலத்தை ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று கூறினார்கள். நான் ஏழாம் நூற்றாண்டின் இறுதியும் எட்டாம் நூற்றாண்டின் முதலும் எனக் காட்டியிருக்கிறேன். மற்ற ஆய்வாளர் நம்பியாண்டார் நம்பிகளை முதல் இராசராசன் காலமெனவும், சேக்கிழாரை இரண்டாம்

குலோத்துங்கன் காலமெனவும் கூறினர். நான் நம்பியாண்டார் நம்பிகளது காலம் ஆதித்தன் காலமெனவும், சேக்கிழார் காலம் மூன்றும் குலோத்துங்கனின் காலமெனவும் கூறியிருக்கிறேன்.

நான்: தாங்கள் எழுதிய நூல்கள்......

அவர்: 'முதலாம் குலோத்துங்கன்' 'பாண்டியர் வரலாறு' 'சோழர் வரலாறு' — இரண்டு பகுதிகள் இவற்றை அண்ணமலைப் பல்கலைக்கழகத்தார் வெளியிட்டுள்ளனர். மூன்றும் பகுதி அச்சாகிக்கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகம் வெளியிடவிருக்கும் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருண்ட காலமாகக் கொள்ளப்படும் களப்பிரர் காலத்து இலக்கியங்களின் வரலாற்றை (மூன்றும் நூற்றுண்டிலிருந்து ஏழாம் நூற்றுண்டு வரை) எழுதியிருக்கிறேன். அது பேராசிரியரின் பார்வைக்குச் சென்றிருக்கிறது.

நான்: தமிழ்நாட்டு அரசர்களின் வரலாற்றை எழுதிய நீலகண்ட சாஸ்திரியார் முடிவுகளினின்று தாங்கள் பல இடங்களில் வேறுபடுகிறீர்கள் அல்லவா?

அவர்: ஆம். நீலகண்ட சாஸ்திரியாரும் மற்ற வரலாற்று ஆராய்ச்சியாளர்களும், தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் நல்லதொரு பயிற்சி பெருமை காரணமாகக் கல்வெட்டுக்களில் பல இடங்களைப் பிழைபடப் பொருள்கொண்டனர். சில சமயங்களில் கல்வெட்டுக்களில் இருக்கும் உண்மைகளைப் புறக்கணித்துவிட்டுத் தாங்களே முடிவிற்கு வந்தனர்.

இராசராச சோழனுக்கு ஆதித்த கரிகாலன் என்னும் ஒரு சகோதரன் இருந்தான். அவன் கொலைசெய்யப்பட்டு இறந்தான். அவன் உத்தமசோழனின் சூழ்ச்சியால் இறந்தான் என்று முடிவு செய்தனர். அவர்கள் கல்வெட்டு ஆதாரங்களைச் சரியாக நோக்கவில்லை. அதில் ஆதித்த கரிகாலனைக் கொன்றது சில பிராமண அதிகாரிகள் என அறியக்கிடக்கிறது. ஒரு சோழன் தன் தந்தையின் கோயிலுக்கு விழா எடுக்கும் போது ஆயிரம் பேர்களுக்கு உணவளித்தான். அவ்வாயிரம் பேரில் ஐநூறு பேர் பல சமயத்தார், முந்நூறு சிவனடியார்கள், இருநூறு பிராமணர்கள் இருந்தார்கள். நீலகண்ட சாஸ்திரியார் ஆயிரம் பேர்களும் பிராமணர்களென்று எழுதிச் செல்கிறார். ஆயிரம் பேர்களிலுள்ள பாகுபாட்டை அவர் எடுத்துக் காட்டவில்லை.

நான்: இன்னும்........

அவர்: இலக்கியங்களில் பொருள் காணுதற்கு மயக்கமாக இருந்த பல இடங்களுக்குக் கல்வெட்டுக்களின் உதவியைக் கொண்டு சரியான பொருள் இன்னதுதான் என்று துணிந்திருக்கிறேன்.

நான்: அரசாங்கம் இப்பொழுது செய்திருக்கும் தமிழ்

எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அவர்: எழுத்துச் சீர்திருத்தம் தேவைதான். வரலாற்று முறையைக் கொண்டு பார்த்தால் கூடத் தமிழ் எழுத்துக்களின் வடிவம் அவ்வப்போது மாறிக் கொண்டேதான் வந்திருக்கிறது. ஆனால் அவை தாமாக ஏற்பட்டவை. இப்பொழுது அரசியலார் செய்யும் சீர்திருத்தம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது. கொஞ்சம் மெதுவாக எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தலாம். என்றாலும் சீர்திருத்தம் வரவேற்கத்தக்கது தான்.

நான்: இத்துறையில் தங்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கியவர் யார்?

அவர்: நான் உயர்நிலைப்பள்ளியில் நான்காவது படிவத்தில் (IV Form) படித்துக்கொண்டிருந்தபோது நற்றிணைக்கு உரைகண்ட பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் எனக்குத் தமிழாசிரியராயிருந்தார். அவரே எனக்கு முதன்முதலில் இத்துறையில் ஆர்வத்தை உண்டாக்கியவர். இவ்வார்வத்தைப் பின்னர் ஊக்கி வளர்த்தவர் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையாவர்.

நான்: சோழர் வரலாற்றைத் தாங்கள் விரிவாக எழுதிய அளவுக்குப் பாண்டியர் வரலாற்றையும், சேரர் வரலாற்றையும் எழுதவில்லையே! ஏன்?

அவர்: சோழநாட்டில் எங்கு பார்த்தாலும் கோயில்கள்! அதனால் நிறையக் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. ஆனால் பாண்டிய நாட்டில் கல்வெட்டுக்கள் மிகக் குறைவு. சேரநாட்டில் அது தானுமில்லை.

★

இவர் கும்பகோணம் தாலுகாவிலுள்ள திருப்புறம்பயம் என்னும் ஊரின்கண் வைத்தியலிங்க பண்டாரத்தார் என்பாருக்கு ஒரே புதல்வராகத் தோன்றினார். இவருக்கும் ஒரே புதல்வர் உண்டு. அவரது புதல்வரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சரித்திரத்தில் எம். ஏ. பட்டம் பெற்று ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இப்போது சதாசிவப் பண்டாரத்தார் அவர்கட்கு அறுபதாவது ஆண்டு நடந்துகொண்டிருக்கிறது. ஒன்பது ஆண்டுகளாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றி வருகிறார். தமிழ்நாட்டு அரசர்களின் வரலாற்றை வரன்முறையாகத் தொகுத்துத் தந்த இவருக்குத் தமிழ்நாடு என்றும் கடப்பாடுடையது.

இரவில்....

நா. பாண்டுரங்கன்

நடுவே டாலர் கோத்த வெண் முத்து மாலையை யாரோ தனித் தனியே பிய்த்து வீசியெறிந்தது போல, உயரத்தில் வட்ட நிலாவும் அதைச் சுற்றிச் சிதறிக் கிடந்த நட்சத்திரங்களும் காணப் பட்டன. மணியொலிகள் பன்னிரண்டு தடவை விட்டுவிட்டு இசைத்து ஓய்ந்தன. அப்போது கடிகாரத்தில் இருக்கும் முட்களைப் போலச் சூழ்நிலையில் படர்ந்திருந்த அமைதியும் என் நெஞ்சில் அடர்ந்திருந்த நிம்மதியும் சேர்ந்து ஒன்ருகியிருந்தன. குதித்து வந்துகொண்டிருந்த குளிர்ந்த மென்காற்று உடலைத் தழுவி நழுவிச் சென்றுகொண்டிருந்தது. தவறிக் கீழே தரையில் விழுந்த வெண்கல டம்ளர் சிதறவிட்ட கதறல் ஒலி திடீரென்று கிளம்பி என் நிம்மதியைக் குலைத்தது. கழுத்தை வளைத்துப் பார்வையைத் திருப்பினேன். திண்ணைக்கு அருகே வாயிற்படியின் உயரே இருந்த மின்சார விளக்கு திடுக்கிட்டுத் தன் கண்ணைத் திறந்தது. உள்ளேயிருந்து வெளியே வாயிற்படியைத் தாண்டி அடியெடுத்து வைத்தாள் வத்சலா. வெளித்தாழ்வாரத்தில் சாய்வு நாற்காலியில் என்னைக் கண்டதும் அவள் கால்கள் அப்படியே நின்றுவிட்டன. நடுவே தூக்கம் கலைந்திருந்ததால் சோர்ந்திருந்த அவள் முகத்தில் பயத்தின் சிறு ரேகைகள் சேர்ந்திருந்தன. இரக்கத்தை உயர்ந்த குரலாக்கிக்கொண்டு வார்த்தைகள் விரைவாக அவள் வாயிலிருந்து வெளி வந்தன. எப்போதோ குடித்திருக்கவேண்டிய பாலை மறந்துவிட்டது அப்போதுதான் என் நினைவிற்கு வந்தது.

கொண்டுவந்து மேசையில் டம்ளரில் வைக்கப்பட்ட பால், இடையில் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட அவள் கண்களில் பட்டிருக்கிறது. படுக்கையில் நான் காணப்படவில்லை. எழுந்து... பால் டம்ளரை எடுத்துக்கொண்டு அவள் வெளியே நடந்திருக்கிருள். கையை விட்டு டம்ளர் தவறிக் கீழே விழுந்துவிட்டது. டம்ளரை விட்டுப் பால் தரையில் ஓடிப் பரவிவிட்டது.

“ஆயிரம் தடவை சொன்னேன். அப்போதே பாலைக் குடிச்சிருந்தா என்ன?”—அவள் கேட்டாள்.

“பழக்கம் பாலைப் புளிக்க வைத்துவிட்டது. ஆனால், அது மட்டுமே காரணமல்ல...”

“வேண்டாததை முன்னமே சொல்லியிருக்கலாம். பொருள் பாழாகாமலாவது தடுத்திருக்கலாமே! ஏன் இந்த அநியாயம்?” —அவள் பேசவில்லை. கோபத்தைப் பேச வைத்தாள்.

“எனக்கு அது அப்போது தேவையில்லாமல் இருந்தது!”

"ஓஹோ! அப்படியானால் இப்போ அது வேண்டும்போல் இருக்கு. இருக்கும்போது அதன் பக்கம் முகத்தைத் திருப்புவதுகூட இல்லை. இழந்த பிறகு தன்னையும் அதனுடன் இழப்பது. இதுதான் இதயத்தின் பைத்தியக்காரத்தனம்!"

நான் சிரித்தேன். நான் எழுதிய வாக்கியங்களை என்னிடமே ஒப்புவித்தாள். மேலே பேசினேன்.

"வத்சலா! அப்போதும் அது வேண்டியிருக்கவில்லை—இப்போதும் அப்படித்தான்."

"ஏனோ தெரியவில்லை?"

"உலகத்தையே மறக்கடிக்கும் உயர்ந்த பொருள் என் அருகிலே இருந்தது."

"இப்போது?"

"இருக்கிறது..."

"பெயரென்னவோ?"

"சிரிக்கும் ரோஜாவின் சிவந்த இதழ்கள்"—சிரித்துக்கொண்டே அவள் மறுத்துப் பேசினாள்.

"இல்லை! முழுக்க முழுக்கத் தவறு. என் கூந்தலில் இருந்தது மல்லிகை..."

"மல்லிகை கூந்தலில் இருந்தது. ரோஜாவின் இதழ்கள் அங்கே இல்லை..."

"பின்னே?"

"அது இருந்த இடம் வேறு... வேறு பெயர்கூட அதற்கு உண்டு."

"என்னவோ?"

"உன் உதடுகள்!"

ஆர்மோனியப் பெட்டி—அகலமாக விரித்து வேகமாக அழுத்தினால் எப்படிக் கதறுமோ அது போல, உள்ளே படுக்கையில்

தூக்கத்தை ஒரே சமயத்தில் பறி கொடுத்துவிட்டுத் தொட்டியில் இருந்த தங்கையும், பாயில் மெத்தையில் இருந்த அவள் சிறு அண்ணனும் சேர்ந்து கதறியது காதைப் பிய்த்தது. வத்சலா விரைவாக உள்ளே போனாள். கதவைத் தாழிடச் சொல்லிவிட்டுச் சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்து வீதியில் நடந்தேன்...

உலகத்துக்கெல்லாம் விடி விளக்காக ஒரே விளக்கை வானம் ஏற்றி வைத்திருக்கும்போது, ஒவ்வொரு தெருவுக்கும் பலப் பல விளக்குகளை ஏற்றி வைத்திருப்பது—முட்டாள்தனமென்றுதான் நினைத்திருக்க வேண்டும் முனிசிபாலிட்டியார். தெருவின் அவ்வளவு மின்சார விளக்குகளையும் அணைத்து வைத்திருந்தனர். வெள்ளம் வடிந்து வெண்மணல் பரந்த ஆறு நீண்டு கிடப்பது போல, என் எதிரே படுத்திருந்த வீதி காணப்பட்டது. இரண்டு பக்கங்களிலும் வரிசையாய் இருந்த வீடுகளில் கதவுகள் இழுத்துச் சாத்தப்பட்டிருந்தன. மூடியிருந்தன அவ்வளவு கதவுகளும்! என் எண்ணம் அவைகளின் அருகே தட்டாமலே நின்று, திறக்காமலே நுழைந்து உள்ளே ஓடியது. மனம் இழுத்து மூடி வைத்திருக்கும் இமைகள்—இமைகள் தாமே மூடியதால் ஓடிப்போய் மறைந்துவிட்ட 'மனங்கள்'—இன்பத்தை விருந்தாக்கிக்கொண்ட உடல்கள்—துன்பத்திற்கு விருந்தான உள்ளங்கள்..........இவ்வளவும் அமைத்த காட்சிகள்! அவ்வளவையும் என் எண்ணம் கண்டு களித்துக்கொண்டிருந்தது. நீண்ட ஒரு தெருவை உதைத்து நகர்த்திவிட்டதை என் பாதங்கள் உணரவில்லை—உதை பட்டு நகர்ந்த அந்தத் தெருவும் அதை

உணரவில்லை — நான் உணர்ந்தேன். என் கால்கள் நடந்து கொண்டிருந்தன.

எதிரே தூரத்தில் ஒரு வீட்டுத் திண்ணையிலிருந்து வெளிவந்த ஓர் உருவம் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு விரைவாக நடந்தது. என் கால்கள் நின்றன. நெஞ்சு வேகமாகத் துடித்தது. அப்படியே திரும்பிவிடலாமா என்ற எண்ணம் தலையெடுத்தது. எனக்கு முன்னே தூரத்தில் நடந்து போய்க்கொண்டிருந்த அந்த உருவம்... அதன் கால்கள் பூமியில் படிகின்றனவா என்பதை அறிந்துகொள்ள என் கண்கள் துடித்தன... அப்போதுதான் நான் பேய் பிசாசுகளில் நம்பிக்கையில்லாதவன் என்ற எண்ணம் எழுந்து என்னைப் பரிகாசம் செய்தது. அச்சம் எவ்வளவு தூரம் என் அறிவைப் பாழாக்கிவிட்டது என்பதை அறிந்ததும் என்னை வருத்தம் வளைத்து இறுக்கியது... வெடி வெடிப்பதற்கு நெருப்புமட்டுமே காரணமல்ல அல்லவா? முன்பே குழாயில் போட்டுத் திணித்து இடித்து வைத்திருக்கிற மருந்தும்தான் காரணம். சிறு வயதிலிருந்து மனத்தில் பேய் பிசாசுகளைப்பற்றிய கற்பனையைத் திணித்து இடித்து வைத்திருக்கிறார்கள். அச்சமாகிய நெருப்பின் சிறு பொறி பட்டதுமே அது வெடிக்கிறது! இந்த மருந்தே இல்லாவிட்டால், நெருப்பின் பொறியென்ன, காட்டுத்தீயே அதில் பாயட்டுமே... பலன் என்ன?... உற்றுப் பார்த்தேன். அந்த உருவம்—அவன் ஏன் இப்படி இந்த வேளையில் இங்கே போய்க்கொண்டிருக்க வேண்டும்? எங்காவது திருடச் செல்லுவானோ? எவரையாவது கொல்லச் செல்லுவானோ?... கையிலிருந்த பாக்கெட்டில் ஒரே ஒரு சிகரட்தான் பாக்கியிருந்தது. குச்சியின் நுனியில் மறைந்திருந்த நெருப்பை அதன் பெட்டியின் ஓரத்தால் எழுப்பிச் சிகரெட்டின் நுனியில் குடியேறச் செய்தேன். அழுந்த உட்கார்ந்துகொண்ட நெருப்பும் இழுத்து முடித்த மூச்சும் சிகரெட்டைப் புகையாக்கத் தொடங்கின; பொழியும் வெண்ணில வொளியில் அழியும் வெண்புகைச் சுருள்கள்! பக்கத்தில் இருந்த ஒரு சத்திரத்தின் திண்ணையில் அவன் ஏறி மறைந்தான். அரும்பாக இருந்த என் சந்தேகம் திடீரென்று மலராக ஆனதைக் கண்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டே இருக்கும்போது அது கனியாகியது! அவன் திரும்பிப் பார்க்கும்போது என்னைக் கண்டிருக்கிறான். ஆள் இருப்பது அவனுக்குப் புரிந்துவிட்டிருக்கிறது. அவன் செயலுக்கு நான் தடைக்கல். என்னை ஏமாற்றுவதற்காக ஏதும் அறியாதவன்போல் சத்திரத்தின் திண்ணைக்குப் போயிருக்கிறான். படுப்பதற்காக இடந் தேடும் பரதேசி என்று நான் அவனை எண்ணிக்கொள்ள வேண்டுமென்பது அவன் எண்ணம்...

என் விழிகள் நிலவை நோக்கின; நினைவுகள் அதன் களங்

கத்தைச் சுற்றின. வானத்தில் ஒரு பக்கத்தில் கருமேகங்கள் குவிந்திருந்தன. மற்றொரு பக்கம் முழுதும் நீலம் கரைத்த வெள்ளை பூசிய சுவர் போல நிர்மலமாக இருந்தது. என் மனத்தில் ஒரு பகுதியில் அச்சம் நிறைந்திருந்தது போலவே, மற்றொரு பகுதியில் தைரியம் மறைந்துவிடாமல் இருந்தது. வேகமாக நடந்து போய் அவனை யாரென்று அதட்டிக் கேட்டால் என்ன? உலகம் உறங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில்... திடீரென்று இரண்டு ஆந்தைகள் குளறி அலறின. மேலே பார்வையைத் திருப்பினேன். அவைகளைக் காணவில்லை. கருப்புக் காகிதம் ஒன்றைச் சுக்கலாகக் கிழித்து வீசும் காற்றில் எறிந்தால் அவை சிதறி எப்படி அசைந்து மிதந்து செல்லுமோ அதுபோல, உயரத்தில் பறவைகள் கூட்டங் கூட்டமாகப் பறந்து போய்க்கொண்டிருந்தன. உற்றுப் பார்த்தேன். பறவைகளல்ல.......பழந்தின்னும் வௌவால்கள்! அறுந்த என் நினைவு விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடர்ந்தது. உலகம் உறங்கும் இவ்வேளையில்...என் ஒரு மனம் சிரித்தது. உலகம் உறங்குகிறது என்று சொல்லுகிறோம். நள்ளிரவு! இந்த வேளையில்தான் ஆந்தைகள் சஞ்சரிக்கின்றன; பழந்தின்னும் வௌவால்கள் உலவுகின்றன; சுடர்விடும் மின்மினிப் பூச்சிகள் பறக்கின்றன; பூனைகள் நடமாடுகின்றன.........இன்னும் எவ்வளவோ ஜீவராசிகள் விழித்து உலவுகின்றன. இவைகளுக்கெல்லாம் வீடு உலகம்தான். இவைகளைப் பார்த்து இப்போது எந்த மனிதனாவது 'உலகம் உறங்குகிறது'—என்று சொன்னால்...

"மனிதா! எண்ணி முடியாத உயிர் வகைகளுள் மனிதன் சின்னஞ் சிறு பகுதிதான். உண்மையில் பகலில் மட்டுமே கண் தெரியும் உயிர் வகைகளே இரவில் உறங்குகின்றன. ஆனால் நீ சொல்வது மனிதனை மட்டும் எண்ணித்தான். மனிதன் உறங்குகிறான். அதனால் உலகம் உறங்குகிறதாம். வேடிக்கை! 'உலகமே தான்! தானே உலகம்!' என்று நினைக்கிறாய். எவ்வளவு சுயநலம்! எவ்வளவு சுயநலம்!"—வாயும் அறிவும் இருந்தால் அவை இப்படித்தானே சொல்லும்!......மனிதனுடைய இரத்தத்தில் சுயநலம் எப்படி எப்படியெல்லாம் ஊறிப் போயிருக்கிறது என்பதை நினைத்ததும்—வேஷம் போட்டு ஊரை ஏமாற்றும் உணர்ச்சிகளில் சுயநலம் தான் ராஜா!...

சத்திரத்தில் பதுங்கிய ஆள்! அவனை யாரென்று அதட்டிக் கேட்டால் என்ன? 'அவன் வெறியனாக இருந்து கத்தியை மடியிலிருந்து எடுத்து நம் மார்பில் அழுத்தினால்'—எண்ணிக்கொண்டே இருக்கும்போது என் கால்கள் சத்திரத்தைத் தாண்டி நடந்தன. சத்திரத்தின் திண்ணையில் இன்னும் யாரோ இருவர் படுத்திருப்பது அங்கே படிந்திருந்த இருளிலும் எனக்குத்

தெரிந்தது. மனதிலிருந்த பயத்தை அழுத்தி நசுக்கிக் கொண்டு வருத்தம் எழுந்தது. நாம் ஏதோ தவறு செய்கிறோம். ஒரு கொலேயோ ஒரு திருட்டோ நடப்பதைத் தடுக்கலாம். ஆனாலும் என் கால்கள் மேலே நடந்துகொண்டிருந்தன. சத்திரத்தில் பதுங்கியிருப்பவனைத் தடுத்துவிடுவதால் கொலேயோ திருட்டோ நடக்காமல் அப்போதுமட்டுமே தடுத்துவிடலாம். தண்டனைக் காலம் முடிந்து வெளிவந்ததும் அவன் அதையே மீண்டும் செய்யாமல் இருப்பான் என்பது என்ன நிச்சயம்? ஆகவே அவனைத் தடுப்பது வீண்தான்!—வருத்தப்பட்ட மனத்திற்கு அறிவு இப்படிப் பொருத்தமாகச் சொல்லிச் சமாதானம் செய்தது. உண்மையில் நான் மேலே நடந்துகொண்டிருந்தது இதனால்தானா? 'இல்லே!—உண்மையை நீ ஏன் மூடி மறைக்கிறாய்? அவனைத் தடுக்கும்போது அவனால் உனக்கு ஏதும் அபாயம் நேருமே என்று பயந்து நடுங்கித்தான் நீ மேலே நடக்கிறாய். உண்மை இதுதான். சுயநலம்—இயலாமை...இவைகளைப் பதுக்கி மறைக்கத் தத்துவம் பேசுவதே இன்று பெரும்பாலோருக்குப் பழக்கமாய்ப் போய்விட்டது. இதிலுள்ள வேடிக்கை, பிறரை ஏமாற்றுவதற்காகவென்று சொல்லப்பட்ட தத்துவம் தன்னையே ஏமாற்றிவிடுகிறது என்பது தான்!'.....இப்படித் தெளிவு எனக்கு விளக்கம் சொல்லியது.

கோடுகளில் பதுங்கியிருந்த சீதத்தை ஓடுகிற காற்றில் அப்போதுதான் ஒலிபெருக்கி உதிர்த்து விட்டுக்கொண்டிருந்தது. பக்கத்துச் சந்தில் திரும்பினேன். ஒரு பங்களாவின் முன்புறம் போட்டிருந்த அலங்காரமான பெரிய பந்தலில், மின்சார விளக்குகள் பகலை வரவழைத்திருந்தன. காலையில் நடக்கப்போகும் திருமணம்—அதற்காக வந்திருந்த விருந்தாளிகளில் சிலர்—அப்போதுதான் சாப்பிட்டு முடித்துவிட்டு நாற்காலிகளில் அமர்ந்து வெற்றிலே சீவல் போட்டுக்கொண்டிருந்தனர். பந்தலின் உள்ளேயிருந்து ஓர் ஆளை ஒருவர் அவன் இரண்டு தோள்களையும் பிடித்துப் பரபரவென்று பின்புறமாகவே வெளியே தள்ளிக்கொண்டு வந்து நிறுத்தினர். பிச்சைக்காரன்! அவமானமும் ஏக்கமுமான கருமேகங்கள் அவன் முகமெங்கும் அடர்ந்து படர்ந்திருந்தன. வயிறாரக் கொஞ்சம் சாப்பாடு!...அதை அவனுக்குக் கொடுத்தால் போதும். கருமேகங்கள் கிழிந்து சிதறும் நிலவை உதிக்க வைக்கலாம்—நட்சத்திரங்களைத் தோன்ற வைத்து மின்ன வைக்கலாம்! ஆனால்......வருத்தமும் ஏமாற்றமும் அவன் விழிகளுக்குள்ளே மின்னலாக ஒளி வீசின! தொண்டையில் இருக்கக்கூடிய விக்கல்களின் முணுமுணுப்பே இடியோசை! பெருமூச்சு—சுழன்றடிக்கும் பேய்க்காற்று. மின்னல்

வீசி, இடிகள் முழங்கி, காற்று வீசிக்கொண்டிருக்கும்போது, அவன் கண்களிலிருந்து பெருமழையே கொட்டத் தொடங்கியது. அந்தக் கல்யாண வீட்டில் மலை மலையாய்ச் சாப்பாடு! அவன் வயிற்றில் அலையலையாய்ப் பசித் தீ! ஆனால், இரண்டுக்கும் இடையில் உள்ள அந்தத் தடை...! உண்மையான சமதர்மவாதி வயிறு ஒன்றுதான்—தேவைக்கு மேல் திணித்தால் வாந்தியெடுக்கவைத்து வெளியே தள்ளிவிடும். உலகத்தில், மனிதன் தன் தேவைக்கு மட்டுமே வேண்டிய உடைமையை வைத்துக்கொண்டு மற்றதை விலக்கிவிட்டால்...

கால்கள் மேலே நடந்தன. அவைகளின் வேகத்தையே தன்னுடைய வேகமாகக் கொண்டு வீதியில் படிந்து தொடர்ந்தது என்னுடைய நிழல்...நிழல் என்பது என்ன? நிழல் என்பது பரவும் ஒளியின் தோல்வி! ஒளி, கிளம்பும் இடத்திற்கும் அடையும் இடத்திற்கும் இடையில் நின்று அதைத் தன்னளவு தடுக்கும் பொருள் தானே நிழலை உண்டாக்குகிறது. என்னுடைய ஆவலிலும் சிந்தனையிலும் சத்திரத்தில் பதுங்கிய ஆள், ஒளியாக ஆகிப் பரவிப் படிந்திருந்தான். இடையில் பந்தலில் நடந்த இந்தச் சம்பவம் நின்று பெரிய நிழலை உண்டாக்கியது. என் உடலின் உருவம் உண்டாக்கிய நிழல் வீதியில் பின் தொடர்ந்ததைப் போலவே, உள்ளத்தில் படிந்த இந்த நிழலும் பின்தொடர்ந்தது. கதிரவன் ஒளியில் உண்டாகும் நிழலோ களைப்பைப் போக்கவும், களிப்பைப் பெருக்கவும் பயன்படுகிறது. நிலவில் உண்டாகும் நிழல்களோ பயத்தையும் பீதியையும்தான் பெரும்பாலும் உண்டாக்குகின்றன. என் ஆவலிலும் சிந்தனையிலும் இருந்த நிழல், நிலவின் நிழல்! இந்த நிழல் மட்டுமல்ல, அதைச் சுற்றி எங்கும் பரவிப் படிந்திருந்த அவ்வளவு ஒளியுமே மெல்ல மெல்ல வேதனையை விதைக்கத் தொடங்கின. இது என் உணர்வை எட்டிப் பிடிக்கும்போது நடந்துகொண்டிருந்த என் பாதங்களில் பட்டு எவ்வளவோ தூரம் எட்டிப் போயிருந்தது...

நான்கு தெருக்கள் சந்திக்கும் இடத்திற்கு நான் வந்து சேர்ந்தேன். சுற்றிலும் அழகிய மண்டபங்களும் அடுக்கடுக்காகக் கட்டப்பட்ட படிகளும் சூழ்ந்த தண்ணீர் நிரம்பிய அந்த அழகான பெரிய குளம்! கட்டிப் பிடிக்கும்போது எட்டி ஓடுவது, எட்டி ஓடினாலும் விட்டுவிடாமல் தொடர்ந்து — இப்படி வீசும் மென் காற்றுக்கும் பேசாமல் இருந்த தண்ணீர்ப் பரப்பிற்கும் நடந்துகொண்டிருந்த ஊடல் சிற்றலைகளாகிச் சிரித்துக்கொண்டிருந்தது. களங்கமுள்ள நிலா பரப்பிக்கொண்டிருக்கும் களங்கமில்லாத ஒளிப்பிரவாகம்!—அது வேறு இந்தச் சிரிப்பில் கலந்துகொண்டு அழகை விரித்து வைத்தது. படிகளில் ஏறி ஒரு பெரிய மண்டபத்தில் உட்கார்ந்தேன்.

மடக்கியிருந்த கால்கள் இரண்டையும் முன்னே நீட்டிவிட்டு முதுகை ஒரு பெரிய தூணில் சாய்த்தேன். என் பார்வை தேனீக்களானது! நிலவொளிக்குத் தன் சிற்றலைகளைக் கண்ணுடியாக்கும் அந்தத் தண்ணீர்ப் பரப்பு-சுற்றிலும் இருந்த படிகள்—நடுவிலிருந்த மண்டபம்... அவ்வளவும் ஊறுந் தேனுள்ள நறுமலர்களாயின! அந்தக் குளத்தினுடைய பெருமை என் நினைவைத் தொட்டதும் சிரிப்பு என்னை எட்டிப் பிடித்தது. மஹா மஹக் குளம்!—இந்தத் தண்ணீரில் எவர் குளித்து எழுந்தாலும், அவர் பண்ணிய பாவம் அவ்வளவும் அப்படியே பறந்து விடுமாம். பாவம்தான் உயிராக உருவெடுத்து மனித உடலுக்குள் புகுந்திருக்கிறது என்று எவரோ சொன்னது அப்போதுதான் உண்மையென்று பட்டது! சிவனுடைய சிரசைச் சோபாவாக்கி, அதில் காலங் காலமாக அமர்ந்திருக்கும் கங்காதேவி!—மாசி மாதம் மகநட்சத்திரத்தில் அந்தத் தேவியே எழுந்து இந்தக் குளத்திற்கு வந்துவிடுகிறாளாம். அந்தத் தேவி செய்த பாவம் என்ன? ஒவ்வொரு தடவையும் வருவதைப் பார்த்தால் மீண்டும் மீண்டும் அந்தத் தேவியிடம் பாவம் குவிந்துவிடுகிறது போல் இருக்கிறது! தேவர்களுக்கு முனிவர்களாக இருப்பவர்கள்கூட, சிவனின் பாதத்தின் தூசி பட்டால் போதும், ஜன்மம் சாபல்யமாகிவிடுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சிவனின் பாதமல்ல, சிரசே சோபாவாகக் கிடைக்கப் பெற்ற கங்கைக்கு ஏற்படும் பாவம் என்ன? யாராயிருந்தால் என்ன என்று தாராவை விருந்தாக்கச் சம்மதித்த அந்தச் சந்திரன்—அவன் அருகிலேதான் இருக்கிறான்—அப்படியானால் கங்கையும் அவனுடன்...சேசே! அப்படியிருக்காது. கங்கை இந்தக் குளத்திற்கு வருவதால்தான் பாவத்தைப் போக்கும் மகிமை இதற்கு வந்திருக்கவேண்டும். இப்போதுள்ள சமுதாய அமைப்பில், பயனை எதிர்பாராத புண்ணியம் செய்வதற்கு எப்போதும் கஷ்டமும் கவலையும் ஏளனமும் பிறரின் இரக்கமும்தான் பரிசாகக் கிடைக்கின்றன. பாவம் செய்வதோ, கொஞ்சம் சாமர்த்தியம் மட்டுமிருந்தால்—கஷ்டமில்லை, சுலபம் என்பதுமட்டுமல்ல, அதனால் இன்பம் கிடைக்கிறது. ஆனால் வெளியில் தெரிந்தால்தான் ஆபத்து. எல்லாமே வெளியில் தெரிந்துவிடுவதில்லை. தெரிந்துவிடும் எல்லாமே ஆபத்தை விளைப்பதில்லை. அதனால், எவ்வளவு பாவம் செய்தாலும் ஒரு முழுக்கில் பறந்துவிடுகிறது என்று உணர்ந்து எல்லாருமே பாவம் செய்ய ஆரம்பித்துவிட்டால்—ஒருவேளை பாவம் செய்பவர்கள்தாம் அங்கே குளிக்க வருகிறார்களோ? கங்காதேவி, இங்கே வருவது அந்தக் காலத்துக் கற்பனை. யார் அதை நம்பச் சொல்வது என்று எவ்வளவோ பேர் கேட்கிறார்கள். ஆனால்,...மகத்தன்று மக்கள்,

குளத்தைச் சுற்றி அழுகிய பொருளைச் சுற்றும் பசியுள்ள ஈக்களாக மொய்க்கும் அந்தக் காட்சியைக் காணும்போது... முட்டாள்களோ, வஞ்சகர்களோ கட்டிவிட்ட கற்பனைகள் அகன்ற வானத்து முழு நிலவாய் இருந்த ஓர் இனத்தை இடிந்த வீட்டின் சரிந்த மாடத்தில் திரி பற்றி எரியும் சிறிய அகல் விளக்காக ஆக்கிவிட்டன என்பதை நினைக்கும்போது,......இதயம் எரியவில்லை, எரியும் நெருப்பே இதயமாய்விட்டதாக உணரவேண்டியிருக்கிறது. அதனுல்,...இதயம் இருக்கும் உடலின் சதையே தீப்பற்றி எரியத் தொடங்குகிறது...

போலீஸ்காரரின் ஊதல் ஒளப்பிய சத்தம், பிடிக்காத இந்த நினைவுகளை விட்டுவிட்டு மனதைத் திருப்பியது. என் கழுத்து திரும்பியது. இரண்டு போலீஸ்காரர்கள், எதிர்த்த மண்டபத்தில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த சிலரை அதட்டி எழுப்பி அங்கே படுக்காமல் விரட்டிக்கொண்டிருந்தனர். போலீஸ்காரர்களின் தலை மறையும் வரையில் அவர்கள் மறைந்திருந்தார்கள். அவர்கள் தலை மறைந்ததுமே மீண்டும் அவர்களில் பலர் அங்கே தோன்றினர்கள். கையை மடக்கித் தலையணையாக்கி உறக்கத்தை முன்போலவே அழைத்தார்கள். இதைக் கண்டதும் இதேயிடத்தில் அன்று நடந்த அந்தக்காட்சி நினைவிற்குவந்தது.

போலீஸ்காரர்கள் அன்றும் இதேபோல் தான் இரவில் அங்கே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தவர்களை விரட்டிவிட்டு நடந்தார்கள். அவர்கள் பின் அங்கே படுத்திருந்து விரட்டப்பட்ட ஒருவன் கண்ணைக் கசக்கிக்கொண்டு தானே நடந்தான். அவர்கள் கேட்டதற்கு அவன் பதில் சொன்னுன். அவன் காய்கறி மார்க்கட்டில் சுமைதூக்கிப் பிழைப்பவன். இரவு ஒன்பதுமணிக்கு ஒரு பஜனைமடத்துத் திண்ணையில் படுத்திருக்கிருன். முதுகில் பட்ட பிரம்படி அவனை விழிக்க வைத்து எழுப்பியிருக்கிறது. அந்தப் பக்கமாகச் சைக்கிளில் போன சப் இன்ஸ்பெக்டர் அவனை விரட்டியிருக்கிருர். மணி பத்து. அடுத்த தெருவிலுள்ள மடத்துக் குறட்டில் படுத்துத் தூங்கியிருக்கிருன். சுரீல் என்று தேள் கொட்டியது போல் இருந்திருக்கிறது. அலறி எழுந்திருக்கிருன். இரவில் ஊர்க்காவல் செய்யும் இரண்டு போலீஸ்காரர்கள் சிகரெட் பிடித்துக்கொண்டு எதிரே நின்றுகொண்டிருக்கிருர்கள். தேள் கொட்டியது என்ற இடத்தில் தொட்டுப் பார்த்தபோது சிகரட் சாம்பல் பொடிகள் படிந்திருந்ததைக்கொண்டு உணர்ந்துகொண்டான். மணி பன்னிரண்டு. குளத்தின் அருகே மண்டபத்தின் மூலையில் நிழலில் உடம்பைச் சுருட்டிப் படுத்திருக்கிருன். அரைமணி நேரத்திற்குப் பிறகு.....

ரயில் வண்டி வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. புளியடைத் ததுபோல் இருக்கும் அந்த ரயில் வண்டியின் படியில் நின்று கொண்டு ஜன்னல் கம்பியைப் பிடித்துத் தொத்திக்கொண்டு அவன் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறான். ரயில்வண்டி பெருத்த குரலில் அலறுகிறது. வழக்கமாக ஊதும் அதன் சத் தம்போல் இல்லை. புல்லாங்குழலி லிருந்து கிளம்பும் இனிய நாதம் ஒலிக்கிறது. அந்த ஆச்சர்யத் தில் அவன் ஜன்னல் கம்பியைப் பிடித்திருந்த கையை விட்டுவிடு கிறான். தலைதெறிக்க ஓடும் ரயில் வண்டியிலிருந்து சாய்ந்து அப் படியே தலைகுப்புற விழுகிறான். ஐயோ என்ற குரல் அவன் மண்டையிலிருந்து தொண்டை யில் இறங்கி அங்கேயேநிற்கிறது ......திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறான். போலீஸ்காரர் களின் ஊதல் சத்தம் விட்டுவிட் டுக் கேட்கிறது. அவன் எதிர் பார்த்ததுபோலவே அவர்கள் அங்கே வந்து அவனுடன் தூங் கிக்கொண்டிருந்த எல்லாரையும் சேர்த்து விரட்டுகிறார்கள். அவன் மட்டும் எங்கும் போகா மல் அவனை எழுப்பிய போலீஸ் காரர்களைப் பின்தொடர்ந் தான். இதுதான் அவன் சொன்ன........கதையல்ல, வதைபட வைக்கும் உண்மை நிகழ்ச்சி—திரையில் காட்டினால் காவியம், எழுத்தில் தீட்டினால் ஓவியம்! 'ஓர் உதவி செய்ய வேண்டும்' என்று அவன் அவர் களைக் கேட்டான். அங்கிருந்து அவனை ஒன்றும் செய்யாது எழுப்பிவிட்டதே, அவனுக்கு மட்டுமல்ல, தங்களுக்கு, மற்ற வர்களுக்குத் தாங்கள் செய்த உதவி என்று பதில் சொன்னார் கள். தான் அந்த ஊருக்குப் புதிது என்றான். அந்த ஊருக் குப் பழையவனாக இருப்பவன் தான் திருட வழிபார்க்கவேண் டும் என்பதில்லை என்று சொன் னார்கள். போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது என்று கேட் டான்; சொன்னார்கள். அவன் சிரித்தான். அவர்கள் தனக்கு உதவி செய்து விட்டதாகச் சொன்னான். அவர்களுக்கு விஷயம் விளங்கவில்லை. நிம்மதி யாக விடியும்வரையில் அங்கேயே போய்த் தூங்கப் போவதாகச் சொல்லிவிட்டு அவன் போலீஸ் ஸ்டேஷன் இருக்கும் பக்கம் நடையைக் கட்டினான்...எதிரே மண்டபத்தில் மீண்டும் வந்து படுத்தவர்கள்மீது என் நினைவு திரும்பியது. ஊர் பூராவும் வீடு கள் இருக்கின்றன—இல்லை. வீடுக ளெல்லாம் கூடி ஊரை உண் டாக்கியிருக்கின்றன. தூங்குவ தற்குக்கூட இடமில்லாமல் ஊரைச் சுற்றி இரவெல்லாம் அலைந்து துடிதுடிக்கும் இந்த மனித உயிர்கள்......

என் கண்களில் விழித்துக் கொண்டிருக்கும் விழிப்பை விரட்டவேண்டும், தூக்கத்தைக் குடியேற்றி விழிக்கச் செய்ய வேண்டும்—இதனால்தான் வீட்டி லிருந்து சிறிது தூரம் உலாவி வரப் புறப்பட்டேன். தூக்கம் பிடிபடாதது மட்டுமல்ல, என்

நெஞ்சில் தூங்கிக்கொண்டிருந்த ஏக்கம் விழித்துக்கொண்டுவிட்டது. இனிமேல் நம்பிக்கைத் தொட்டிலில் அதைக் கிடத்தித் தர்க்கவாதங்கள் தாலாட்டினால் தான் அதன் இமைகளைத் தூக்கத்தால் இழுத்துச் சாத்தலாம். இல்லாவிட்டால் துடித்துக்கதறியலறி அது செய்துவிடும் ரகளை ...அருகேயுள்ள வீட்டில் கடிகாரம் உதிர்த்த மணியொலிகள் இரண்டும் என் இதயத்தில் ஒரு விநாடி திகைப்பை நிரப்பின. சத்திரத்தில் பதுங்கிய அந்த ஆள்! கல்யாண வீட்டில் பிடித்துத் தள்ளப்பட்டப் பிச்சைக்காரன். முன்னவன் ஆவல் நிறைந்த பயத்தை உண்டாக்கினான். பின்னவன் வருத்தத்தை உண்டாக்கினான். ஆவல் நிறைந்த பயமும்—வருத்தமும்! வருத்தம் என்பது சிந்தனைக் கட்டுரை! 'ஆவல் நிறைந்த பயமோ நெஞ்சையள்ளுந் துப்பறியும் நாவல்!—துப்பறியும் நாவல்தான் சிந்தனைக் கட்டுரையை விற்பனையில் எங்குமே தோற்கடிக்கிறது. சத்திரத்தில் பதுங்கிய ஆளைப் பற்றிய நினைவு, பிச்சைக்காரனின் நினைவை வென்று மேலோங்கியது. சத்திரத்தில் பதுங்கிய ஆள்—அவன் உண்மையில் திருடன் தானா? இல்லை......

கூச்சலும் குழப்பமும் என்னை எழுந்து , நடக்க வைத்தன. எதிரே தூரத்தில் இருந்த வெற்றிலைப்பாக்குக் கடையில் ஒரே கூட்டம்......முன்னே போடப்பட்டிருந்த பெஞ்சியில் இரண்டு போலீஸ்காரர்கள் தொப்பிகளைக் கழற்றி வைத்துவிட்டு உட்கார்ந்து 'கலர் சாப்பிட்டுக்' கொண்டிருந்தார்கள். கலரில் இருந்த சிவப்பு அவர்களின் விழிகளில் படர்ந்திருந்தது. நின்றுகொண்டிருந்த ஒரு பெண் அழுதுகொண்டிருந்தாள். பக்கத்தில் இருந்த ஒரு சிறுவன் அவளைப் பிடித்துக்கொண்டு அலறிக்கொண்டிருந்தான். எண்ணெய் படாத சுருள் கிராப்புகள்—உதட்டைச் சுடும் துண்டு பீடிகள்—இவர்களில் சிலர் அங்கே சுறுசுறுப்புடன் கூடியிருந்தனர். அருவருட்டையும் ஆபாசத்தையும் கேலியாக்கிப் பேசிச் சிரித்துக்கொண் டிருந்தார்கள். ஆச்சரியம் என் திகைப்பைப்பிடித்து வெளிக்கிளப்பியது. கல்யாண வீட்டுப் பந்தலில் நான் பார்த்த பிச்சைக்காரன். அவனைப் பிடித்துத் தடுத்துக்கொண்டிருந்தார்கள். போலீசார் இருப்பதையும் மறக்கடித்திருக்கிறது அவனுடைய ஆத்திரம். பயத்தையும் பரிதாபத்தையும் சிலையாக்கி வைத்திருப்பதைப் போல் அங்கே நின்றுகொண்டிருந்த அந்த வாலிபன் — பழுப்பேறிய அவன் கண்களும் அழுக்கேறிய அவன் உடுத்தியிருந்த துணிகளும்...பிச்சைக்காரன் விட்ட குத்துகளுக்கும் இடிகளுக்கும் அந்த வாலிபன் வளைந்துதான் கொடுத்தான். தடுத்து எதிர்க்கவில்லை. விஷயம் விளங்கியது. பிச்சைக்காரன் இன்னும் மனதால் பிச்சைக்காரனாகவில்லை. அவன் ஒரு மாஜி நெசவாளி! அவள் அவன் மனைவி. அந்தப்

பிள்ளை அவர்களுடையது. சொந்த ஊரில் வேலை இவர்களைக் கைவிட்டது. உண்மைத் தமிழர்கள் ஆனார்கள்! அதாவது, யாதும் இவர்களுக்கு ஊரானது. யாவரையும் சொந்தக்காரர்களாக நினைத்தார்கள். ஆனால், யாவரும் இவர்களை அப்படி நினைப்பதேது? அவர்கள் படுக்குமிடம் அந்தச் சத்திரம்தான். அன்று முழுதும் அவர்கள் பட்டினி. திடீரென்று இரவில் கிளம்பிய ஒலிபெருக்கியின் இசை அவனை எழுப்பி யிருக்கிறது...கல்யாண வீட்டை நோக்கி இழுத்திருக்கிறது. கொஞ்சநேரம் கழித்து, தனியேயிருந்த அவனுடைய மனைவியின் கைமீது குளிர்ந்த ஸ்பரிசம் பட்டிருக்கிறது. கையை பயத்தால் உதறியிருக்கிறாள். வட்டவடிவமான பெரிய நாணயம் ஒன்றை அவள் கைக்குள் இன்னொரு கைவைத்து அழுத்தி யிருக்கிறது. அவள் திமிறியிருக்கிறாள்- அதற்குள்...! வெறிக்கு அடிமையான ஓர் ஆண் வெற்றியை அடிமைப்படுத்தினான். வலிவின்மைக்குப் பலியான ஒரு பெண் கற்பைப் பறிகொடுத்தாள்! பக்கத்தில் படுத்திருந்த பிள்ளை திடீரென எழுந்து அலறி யிருக்கிறது. அப்போது—உணவைத் தேடிப்போன கணவன் கல்யாண வீட்டில் வெளியே பிடித்துத் தள்ளப்பட்டும் எப்படியோ சத்யாக்கிரகம் செய்து உணவை அடைந்திருக்கிறான். தான் சாப்பிட்டுவிட்டுத் தன் மனைவிக்காகத் துணியில் நிறையக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறான்......அங்கே அவன் கண்ட காட்சி! பயிரே வேலியைவிலக்கி வழிவிட்டிருக்கிறதா? இல்லை. மாடுதான் வேலியை முறித்து உள்ளே பாய்ந்திருக்கிறதா? ஆடிச் சுழன்றது அவனுடைய மனம். உடலில் ஓடிக்கொண்டிருந்த இரத்தம் கொதித்தது. அவன் குதித்தான், இருவரையுமே அடித்தான்—உதைத்தான்—அழுதான்! அப்போது அங்கே போய்க்கொண்டிருந்த போலீஸ்காரர்கள் அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள்...

என்னுடைய மனதில் ஆவலையும் அச்சத்தையும் நிரப்பி யிருந்த சந்தேகச் சிக்கல் திடீரென்று விடுபட்டது. வீட்டிலிருந்து கிளம்பியபோது நான் கண்ட உருவம்—சத்திரத்தில் பதுங்கிய ஆள்—வேறு யாருமல்ல—அங்கே நின்றுகொண்டிருந்த அந்த வாலிபன்தான்... திட்டம்போட்டு அதன்படி நடந்திருக்கிறான். வெற்றியும் அடைந்திருக்கிறான். ஆனால், சந்தர்ப்பம் அவனைக் காட்டிக்கொடுத்து விட்டது. தலையிலடித்துக் கொண்டு கதறுகிற கணவன்—அழுது கண்ணீர் வடிக்கிற மனைவி—காரணமறியாது எதற்கோ அலறுகிற பிள்ளை... இந்தக் காட்சியைக் கண்டபோது இவ்வளவுக்கும் காரணமான அந்தக் காமவெறியன், அவன் மீது எனக்கு வந்த ஆத்திரம் அவன் முகத்தில் படிந்திருந்த பயத்தையும் பரிதாபத்தையும் பார்த்தபோது அது எப்படித் தான் அடங்கியதோ தெரிய

வில்லை! தேவையின் கடுமையும் இல்லாமையின் கொடுமையுந் தான் களவை விதைக்கின்றன என்பது எல்லோருக்குந் தெரிந்ததுதான். அப்படியானுல் அந்த வாலிபன் செய்த களவு...கற்பைக் களவாடுகிருேம் என்று அவன் உணர்ந்திருந்தால் அவன் அப்படிச் செய்வதேது? அவனுக்கு அப்போது வேண்டியிருந்ததெல்லாம் புலன்களில் விழித்துக்கொண்ட பசிக்கு உணவு! பிச்சைக்காரனுடைய பசியும்—இந்த வாலிபனுடைய பசியும்! எந்தப் பசிக்குமே உணவு கிடைக்காதது கொடுமைதான்!

வெற்றிலைபாக்குக் கடைக்காரரின்மீது சதாரணமாக என் பார்வை பதிந்தது. பேசாமல் சிகரெட் பாக்கெட் ஒன்றை எடுத்து என்னிடம் நீட்டினுர். நானும் அதைப்பேசாமல் வாங்கிக்கொண்டேன். இனிக் கடைசித் தடவையாகச் சிகரெட் குடிப்பதே அன்றுதான் என்று வத்சலாவிடம் கண்டிப்பாகச் சொல்லியிருந்தேன். நினைவு அதை அறிவுக்குச் சொல்லிவிட்டுச் சிரித்தது. பழக்கத்தின் மயக்குந் தன்மையை எண்ணினேன். இன்னெரு நினைவு சிரிப்பை உதடுவரையில் கொண்டுவந்து நிறுத்தியது. 'டார்வி'ன் சிந்தாந்தத்தை 'நாம் சிகரெட் குடிப்பது ஒன்றிலிருந்தே நிரூபித்து விடலாமே என்று அந்த நண்பன் சொல்லியிருந்தான். ஆவலோடு எப்படி என்று கேட்டேன். ஒரு குரங்கு செய்கிறபடியே அதைப் பார்க்கும் எல்லாக்குரங்குகளும் செய்யும் என்றுன். என் ஆவல் வளர்ந்தது. 'இங்கே ஒவ்வொருவனும் குடிக்கும் முதல்சிகரெட் தேவையின் தூண்டுதலாலோ, பலனின் வேண்டுதலாலோ அல்ல—ஒருவன் செய்வதைப் பார்த்துத் தானும் அதுபோல் செய்யவேண்டும் என்ற ஆவலிஞல்தான்' என்று அவன் சொல்லிவிட்டுச் சிரித்தான். நான்சிந்தித்தேன்; சிரித்தேன்!... போலீஸ்காரர் அந்த வாலிபனை எந்த ஊர், என்று கேட்டார். மௌனமாகவே அவன்நின்ருன். கன்னத்தில் பளீரென்று ஓர் அறை—அவர் முறம் போன்ற கை அவனுடைய கன்னத்தைத் தாக்கியது. அவன் முகம் சிவந்தது. சிகரெட்டின் நுனியிலிருந்த நெருப்பு என் இதயத்தைச் சுரீலென்று சுட்டது. என்னைச் சுற்றியிருக்கும் நிகழ்ச்சி என்ன? என் சிந்தனையில் சுழலும் நினைவுகள் எப்படி? 'உலகம்' இப்படித்தான் இருக்கிறது...

என் கால்கள் நடந்தன. உயரத்திலிருந்த சந்திரனைப் பார்த்தேன். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்குக் காட்டப்படும் குளோப்—ஆனுல் இது மின்னும் வெள்ளியால் செய்யப்பட்டிருந்தது. நிலவில் உள்ள களங்கமல்ல, அதுதான் நிலப்பரப்பு. உலகில் நிலம் இருந்ததால்தான் இவ்வளவு தொல்லைகள்—எல்லாமே நீர்ப் பரப்பாக இருந்திருந்தால்......!

2. பிணம் நடந்தது!

சற்று தூரத்திலே ஒரு அல்லிக்குளம். அந்தக் குளக்கரையில் ஒரு சிறு ஈச்சங்கன்று, பாதி நீரிலும் பாதி கரையிலுமாக விழுந்து கிடந்தது. அந்த ஈச்சங்கன்றின் மேல் தலையை உயர்த்தி நிமிர்த்திக் கொண்டிருந்தது ஒரு கருநாகம். அந்தக் கருநாகத்தின் வாயில் சிக்கிக் கொண்டிருந்தது ஒரு தவளைக் குட்டி. அந்தத் தவளைக் குட்டி 'கொடா கொடா' என்று சாவுக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தது. ஐயோ பாவம்!

இந்தப் பரிதாபமான காட்சியைப் பார்த்துக்கொண்டே, படித்துவந்த கதையையும் மறந்துவிட்டு, மெள்ள எழுந்து நின்றான் மாயவன். தவளைக் குட்டியின் கூச்சல் வரவர மங்கிக் கொண்டே வந்தது. பின்னே? அதுதான் செத்துக் கொண்டே இருக்கிறதே!

மாயவன் மெள்ளக் குளத்தை நோக்கி நடந்தான். மாயவன் வருவதைக் கண்ட கருநாகம் பக்கத்திலிருந்த கள்ளிப் புதருக்குள் 'சர்'ரென்று பாய்ந்து புகுந்து மறைந்தது. அதே சமயத்தில் குளத்தின் அந்தண்டைப் பக்கக் கரையில் விழுந்துகிடந்த ஒரு சிறுவனின் பிணத்தைக் கண்டதும், மாயவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் ஸ்தம்பித்து நின்றான். அவன் உடலும் உயிரும் தடுமாறின.

ஒரு நிமிஷம் பயங்கரமாயக் கரைந்த பின்...

மாயவன், அங்கிருந்து கொஞ்ச தூரத்தில் ஏற்றம் இறைத்துக் கொண்டிருக்கும் தன் அப்பாவிடம் பறந்தோடினான்.

"அப்பா! அப்பா! இங்கே வாருங்களேன்!" என்று ஏற்றம் இறைத்துக்கொண்டிருந்த அப்பாவை கத்தி அழைத்தான் மாயவன். அவன் அப்பாவும், கூடவிருந்த இரண்டு மனிதர்களும் "என்ன, என்ன?" என்று பதை பதைத்துக் கொண்டே பறந்தோடி வந்தார்கள்!

"வாருங்களேன்! அல்லிக் குளக்கரையில் ஒருபையனின் பிணம் அனாதையாய்க் கிடக்கிறது. வந்து பாருங்களேன்!" என்று கூவிக்கொண்டே முன்னேடினுன் மாயவன். அவன் அப்பாவும் மற்றவரும் அவன் பின்னுல் ஓடினுர்கள்.

அல்லிக் குளத்தருகில் ஓடி நின்ற மாயவன் திடுக்கிட்டுப் போனுன்! அவன் பின்னுல் வந்து நின்ற அவன் அப்பாவும் மற்றவர்களும் "எங்கே? எங்கே?" என்று ஆர்ப்பரித்தார்கள்.

"அதோ!" என்று குளத்தின் அடுத்த கரையைச் சுட்டிக் காட்டினுன் மாயவன். அவன் அப்பாவும் மற்றவர்களும் பார்த்தார்கள்.

அந்தக் கரையில் விழுந்து கிடந்த ஒரு சிறுவனின் பிணம் மெள்ள எழுந்து தள்ளாடித் தள்ளாடி நடக்க ஆரம்பித்தது! அடே!

3. ரோஜாபுரத்து ராஜா!

"ஏண்டா மாயவா, பிணம் நடக்கிறதே!" என்று தன் அருகில் இடித்து வைத்த புளிமூட்டை மாதிரி அசையாமல் நிற்கும் மாயவனைப் பார்த்துக் கிண்டலாய்க் கேட்டார் அப்பா. கூட இருந்தவர்கள் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

"யாரோ, மூர்ச்சித்து விழுந்திருக்கிறுன். அவனைக் கண்டு, கருப்பைக் கண்ட எருமை மாதிரி கதிகலங்கி விட்டிருக்கிறுன்

உங்கள் அருமை மகன். உம்...ம். வாரும்,'' என்று கூட வந்திருந்தவரில் ஒருவர் சிரிப்பை அடக்கிக் கொண்டு சொன்னார்.

"மக்கு! போ வேலையைப் பாரு" என்று மாயவனின் முதுகில் செல்லமாய் ஒரு அடி கொடுத்துவிட்டு, வந்திருந்தவர்களுடன் பேசிச் சிரித்துக் கொண்டே கிளம்பினார், மாயவனின் அப்பா.

இரண்டு நிமிஷங்கள் புதைந்தன.

கொஞ்ச தூரத்தில் தட்டுத் தடுமாறி நடந்து போகும் அந்தப் பிணத்தை...பையனை...இமையசையாமல் பார்த்துக் கொண்டே இருந்தான் மாயவன். தள்ளாடி நடந்து சென்ற அந்தப் பையன் கொஞ்சதூரம் நடக்க முடியால் நடந்தான். மேலும் நடக்க முடியாமல் பக்கத்தில் நின்ற குண்டு மல்லிகை மரத்தடியில் போய், உயிரும் உடலும் சோர்ந்து "அம்மா!..." என்று கத்திக்கொண்டே தொப்பென்று வீழ்ந்தான்!

"ஐயோ, பாவமே!" என்று திடுக்கிட்டு அலறிக்கொண்டே மாயவன் விழுந்தடித்துக்கொண்டு அந்தப் பையனிடம் பறந்தோடினான்; மூர்ச்சித்துக் கிடந்த பையனின் அருகில் உட்கார்ந்தான். மூக்கில் கையை வைத்துப் பார்த்தான். மூச்சு மெல்ல வந்து கொண்டிருந்தது. மாயவன் சுற்றுமுற்றும் திரும்பித் திரும்பி 'யாராவது இருக்கிறார்களா?' என்று பார்த்தான். யாரும் இல்லை!

மாயவன் அந்தப் பையனை இரண்டு கைகளாலும் தன் முழுப் பலத்தையும் கூட்டி வாரி எடுத்தான்; தோள் மீது போட்டுக் கொண்டான்; ஆலமரத்தடியை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி நடந்தான். ஆலமரத் தடிக்கு வந்

தான். தோள்மீது கிடந்த பையனை மெதுவாக இறக்கி மரத்தடியில் கிடத்தினான். அருகிலிருந்த அல்லிக்குளத்தை நோக்கி ஓடினான். முண்டாசுத் துண்டை அவிழ்த்து நீரில் நனைத்து எடுத்துக் கொண்டான்; ஓடோடியும் வந்தான். அடித்துப் போட்ட பாம்புபோல் சுருண்டு முடங்கிக் கிடந்த பையனின் முகத்தில் நீரைப் பிழிந்தான்.

ஓரிரண்டு விநாடிகள் ஊர்ந்து போயின, அமைதியாக!

பையன் மெல்ல உடலை நெளித்தான். கண்ணிமைகள் தாமரை மொட்டுப்போல மெதுவாக மலர்ந்தன. தன் அருகில் அநுதாபமும் அன்பும் தவழ்ந்த முகத்துடன் அமர்ந்திருந்த மாயவனைப் பார்த்தான். பார்த்ததும் அந்தப் பையன் விருட்டென்று கையை ஊன்றி எழுந்தான். பரபரப்புடன் விழித்தான். சுற்றுமுற்றும் பார்த்து, "டேய் அண்ணாச்சி! பயப்படாதே, வா. அப்படி உட்கார்ந்து கொள்ளலாம். எழுந்திரு" என்று அன்புடன் சொன்னான் மாயவன். அந்தப் பையன் மாயவனைப் பார்த்துப் பரக்கப் பரக்க விழித்தான்.

"ஏண்டா அண்ணாச்சி, விழிக்கிறாய்? உம். எழுந்திரு. அப்படி உட்கார்ந்து கொள்ளலாம்" என்று சொல்லிக் கொண்டே அந்தப் பையனின் தோள்களைப் பிடித்து மெதுவாகத் தூக்கி நிறுத்தினான் மாயவன். பிறகு, இருவரும் மெள்ள நடந்து போய் மரத்தடி மலைப்பாறையின் மீது அமர்ந்தார்கள்.

சிறிது நேர மௌனத்திற்குப் பின்...

அந்தப் பையன் எதை நினைத்துக் கொண்டானோ? எதை எண்ணிப் பார்த்தானோ? அவன் தன் இரு கைகளாலும் முகத்தைப் புதைத்துக்கொண்டு உடல் குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்து விட்டான்!

மாயவனுக்கு மனதை என்னவோ பண்ணியது. அவன், அந்தப் பையனின் தோள்மீது பாசத்தோடு கையைப் போட்டு, "டேய் அண்ணாச்சி, அழாதேடா அண்ணாச்சி. எதற்காக அழுகிறாய்? உனக்கு ஏன் இந்தக் கதி? நீ எந்த ஊர்? இங்கே ஏன் வந்தாய்?" என்று கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்டான்.

பல நிமிஷங்களுக்குப் பிறகு அந்தப் பையன் பொங்கி வரும் அழுகையை அடக்கிக் கொண்டு, விம்மலுக்கும் விக்கலுக்கும் இடையே சொன்னான்.

"கேளுடா அண்ணாச்சி. என்னுடைய ஊர், இங்கிருந்து சுமார் அறுபது மைல் தூரத்திலிருக்கும் ரோஜாபுரம். என் அம்மா என்னுடைய சிறுவயதிலேயே இறந்துவிட்டாள். என் அப்பா ஒருவர்

தான் எனக்கு. வேறு அண்ணன், தம்பி, தங்கை யாரும் இல்லே. என் அப்பாவுக்கு நான் ஒரே மகன்தான். என் அப்பா என்னேச் செல்லமாகத்தான் வளர்த்தார். ஆனுலும் அவரை எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லே! பெரிய காந்திபக்தர்தான். எங்கள் ஊரில் பத்தாயிரம் ரூபாய் செலவில் ஒரு காந்திஸ்தூபி கூடக் கட்டித் தான் வைத்தார். என்ன பண்ணி என்ன பிரயோசனம்?

"என் அப்பா ஒரு பெரிய கொலேகாரர். கொஞ்சம் கூட இரக்கத்தன்மை இல்லாத இரும்பு நெஞ்சம் படைத்தவர். அவரை அந்தப் பாவத்திலிருந்து விலக்க நான் எவ்வளவோ பாடுபட்டேன். காந்திஜீயின் கொள்கைக்கு விரோதமான அவர் செய்கையைக் கண்டித்து பல மொட்டைக் கடிதங்கள் எழுதிப் பார்த்தேன். தைரியமாக நேராகவும் கேட்டுப் பார்த்துக் கெஞ்சினேன். காலில் விழுந்து கதறினேன். அப்போதும் அவருக்கு அந்தப் பாவச் செயலே விட்டுவிட மனமில்லே. நான் கேட்டால் என்னே அடித் தார்; உதைத்தார். நான் தீவிரமாக யோசித்துப் பார்த்தேன். கடைசியில் என் அப்பாவோடு வாழ எனக்குப் பிடிக்கவில்லே. ஊரைவிட்டு ஓடிவந்துவிட்டேன்..." என்று சொல்லி முடித்து விட்டு மௌனமாய்க் கண்ணீர் வடித்தான் அந்தப் பையன்.

"உன்னேப்போல ஒரு சிலராவது இருந்தால்தானே காந்தியின் வாழ்க்கை பயன்பெறும்" என்று மாயவனும் கண்ணீர் மல்கிய தன் கண்களேத் துடைத்துக்கொண்டான்.

"இவனேப்போன்ற குட்டி மகாத்மாக்கள் இருந்து வருவதால் தானே சுதந்திரம் கூட இன்னும் உயிரோடு வாழ்கிறது!" என்று இத்தனே நேரமும் அந்தப் பையன் சொன்னதையெல்லாம் பின் புறத்தில் மௌனமாய் நின்று கேட்டுக்கொண்டிருந்த மாயவனின் தங்கை ரஞ்சிதம், கண்கலங்கச் சொன்னுள். மாயவனும், அந்தப் பையனும் சட்டென்று திரும்பிப் பார்த்தார்கள். ரஞ்சிதம் தலே மீதிருந்த கஞ்சிப் பானேயைக் கீழே இறக்கி வைத்தாள். அந்தப் பையனின் அருகில் உட்கார்ந்தாள்.

"அண்ணுச்சி, உன் பேர் என்னடா?"

"ராஜா" என்ருன் அந்தக் குட்டி மகாத்மா.

"உம், வாடா அண்ணுச்சி கஞ்சி குடிக்கலாம்" என்று பாறையை விட்டு எழுந்தான் மாயவன். ராஜாவும் எழுந்தான். இருவரும் குளக்கரைக்குச் சென்று குளித்து வந்தார்கள். ஆல மரத்தடியில் உட்கார்ந்தார்கள். ரஞ்சிதம் பானேயிலிருந்த கஞ்சி யைப் பிடி பிடியாக வாரி இருவர் கையிலும் மாறி மாறிப் போட் டாள். கூடத் துளித்துளி வேர்க்கடலே ஊறுகாய்!

சிறிது நேரத்தில் பானை காலி!

மாயவனும், ராஜாவும் கையலம்பிக்கொண்டு வந்தார்கள். ரஞ்சிதம் பானையைக் கழுவியெடுத்து வந்தாள்.

"டேய் ராஜா அண்ணாச்சி, நீ என் தங்கச்சிகூட வீட்டிற்குப் போ. நான் சாயந்திரமாக வருகிறேன். என்ன?"

"உம், சரி அண்ணாச்சி" என்றான் ராஜா.

"உம், புறப்படு" என்றாள் ரஞ்சிதம் களிப்புடன். ரஞ்சிதமும், ராஜாவும் புறப்பட்டார்கள். "நீ சீக்கிரமா வந்துவிடுகிறாயா அண்ணாச்சி?" என்று சிரிப்புத் துள்ளக் கேட்டான் ராஜா, மாயவனைப் பார்த்து.

"ஓ...வந்துவிடுகிறேண்டா என் சோஜாபுரத்து ராஜா!" என்றான் மாயவன், சிரிப்பு வெடிக்க!

ரஞ்சிதமும் ராஜாவும் சிரித்துக்கொண்டே போனபின், மாயவன் பாறையின்மீது வந்து உட்கார்ந்தான். "ஏவ்வ்..." என்று நீண்ட ஏப்பம் விட்டுக்கொண்டே மடியில் வைத்திருந்த கதைப் புத்தகத்தை எடுத்தான். விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து படிக்க ஆரம்பித்தான்.

(தொடரும்)

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு : *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்

சிலோன் ஏஜண்ட்:

NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st., கொழும்பு-1

களங்கம்

ஏ. எஸ். ராகவன்

மேல்வானத்தில் கருமை படர்ந்து இருளின் வரவையும் மழையின் வரவையும் ஒருங்கே அறிவுறுத்திக் கொண்டிருந்தது. வெளிரிய சில மேகங்கள் வானத்தின் மற்றொரு கோடியில் தலை கீழாகத் தவஞ்செய்தன!

வாய்க்கால் துறையில் குடத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தாள் அஞ்சலை. அதைப் பளபளப்பாக்கி விடவேண்டுமென்ற எண்ணம் அவளுக்கு இல்லை. அவளுடைய கைகள் மட்டும் குடத்தை உராய்ந்து கொண்டிருந்தன. ஆனால் மனத்திலோ எத்தனையோ எண்ணங்கள் சுழியிட்டன.

வானம் படபடத்துச் சோம்பல் முறித்து மின்னியது. அந்த ஓசை அஞ்சலையைக் கிள்ளி விட்டதுபோல உணர்வூட்டியது. குடத்தைப் பார்த்தாள். ஒரு புறம் பளபள வென்றும் மற்றொரு புறம் புளிச் சக்கையுடனும் குடம் அவளைப் பார்த்துச் சிரித்தது. மளமள வென்று மறுபுறத்தையும் தேய்த்துவிட்டு நீர் முகந்துகொண்டு அவள் புறப்படும்போது, "இந்தா புள்ளே, உன் கதியை நெனச்சாத் தான் எனக்குப் பரிதாவமா இருக்கு" என்று ஒரு குரல் அவளை விசாரித்தது.

அஞ்சலை நிமிரவில்லை. பெண் புலியைப் போலக் கோப வெறி அவளை உலுக்கியது. அந்தக் கணம் அவளுடைய பெண்மையைக் குறித்தும் அவளுக்கு வெட்கமாகத் தான் இருந்தது.

"ஐய, நீ துக்கம் விசாரிக்காட்டி மோசம் போச்சோ?" என்று பீறிட்டாள்.

அவன் சிரித்துவிட்டு அருகில் வந்தான். அவன் கையிலிருந்த துண்டுப் பீடியை ஒரு தடவை மேல்நோக்கி இழுத்து விட்டு மீண்டும் சிரிக்க முயன்றான். பீடியை இழுத்தபோது அதில் தோன்றிய நெருப்பின் சிவந்த ஒளி அவனுடைய உறுதியின் தெளிவு போல அவளுக்குப் பட்டது.

"இந்தா அஞ்சலை, நான் துக்கம் விசாரிக்காட்டி என்ன மோசம்னு கேக்கிறியே? நானும் காளியும் சிறு வயது முதல் இந்த வாய்க்காலில் குதித்து விளையாடினவங்க. தோப்பிலே சூறையிட்டுப் பங்கு போட்டுக் கும்மாளம் அடிச்சவங்க. அவனுக்கு நேர்ந்த கஷ்டம் எனக்கு மட்டும் இல்லையா?" என்றான் மாரி.

அவளுக்கு அவன் பேச்சு புது மாதிரியாக இருந்தது. மாரி இவ்வளவு 'நல்ல தனமாக'ப் பேசினது கிடையாது. ஆனால் இன்று பேசுகிறான். காரணம்? சிறைக்குப்

அட்டைப்படக் கதை

போய் விட்ட தன் நண்பன் காளியைப்பற்றிய வருத்தமாகத் தான் இருக்கவேண்டும். இவன் எப்படிப்பட்டவனே? நண்பன் விஷயத்தில் அக்கரை காட்டு வதும், இரக்கப் படுவதும் உலக இயல்புதானே?

"என்னவோ அண்ணே, அவரு நல்லவருதான். ஆனு இந்த ஊரு எல்லாரையும் முளுங்கி ஏப்பம் விட்டுடும்" என்ருள் அஞ்சலை.

அப்போது படித்துறைப் பக்க மிருந்து உண்மையாகவே, யாரோ ஏப்பம் விடுவது அவர்கள் காதில் விழுந்தது. அஞ்சலைக்கு உடம்பு ஒரு கணம் ஆடியது. இண்டாவது தடவையாக அவளுடைய பெண்மையைப் பற்றிய அச்சம் அவளை அலைத்தது.

மாரி அவளை நோக்கி, "அஞ்சலை, என்னை வித்தியாசமா நெனைக்காதே. உம் மனசு எனக்குத் தெரியும். ஊரு பலது பேசும். அதைப்பத்திக் கவலைப் படாதே. காளி நல்லவன். எனக்குத் தெரியும்" என்ருன்.

அவள் முகத்தில் மெல்லிய மகிழ்ச்சி ரேகை ஓடியது.

"யாரது அங்கே?" என்ற குரல் வந்த போது அஞ்சலை நிமிர்ந்து பார்த்தாள்.

மாரி மெல்ல நகர ஆரம்பித்தான். அஞ்சலையும் தன் குடிசையை நோக்கி நடந்தாள். அவ்விருவரையும் அர்த்தம் பொங்கப் பார்த்துவிட்டு மிராசு மஞ்சியா பிள்ளை துண்டை இழுத்துத் தலையில் வரிந்து கட்டினார். என்னவோ யாருக்கும் புரியாத ரகசியம் தனக்குப் புரிந்து போய் விட்டதாக எண்ணிக்கொண்டார் போலும்!

அஞ்சலையின் கணவன் காளி முரடனே தவிர நல்லவன். எடுத்ததற்கெல்லாம் கோபம் வரும். வாய்க்கு வந்தபடி பேசுவான். அவனை எதிர்க்க எல்லோருக்கும் பயம். வலுத்த உடற்கட்டும், முறுக்கு மீசையும் கண்டவரைக் கலங்கச் செய்யும்.

அப்படிப்பட்டவன் மனைவியைக் கலங்கவிட்டுச் சிறைக்குப் போய்ச் சேர்ந்தான். காரணம் திருட்டுக் குற்றம். மஞ்சியா பிள்ளையின் பரந்த வாழைத் தோட்டத்திலே ஒரு நாள் இரவு ஐந்தாறு தார் வாழைகளைக் காளி தன் தேவைக்காக வெட்டி விட்டான்; பிடிபட்டான்; தண்டனையை அனுபவிக்கச் சேலம் சிறைக்குப் போய்ச் சேர்ந்தான்.

சாதாரண குடும்பம். வருவாய் வயிற்றைக் கழுவ முடியாதிருந்த நிலையில் அஞ்சலைக்காக அவன் ஏதாவது சேர்த்து வைத்து விட்டா சிறைக்குப் போனான்? இல்லையே...! ஆகவே அவள் தன் வயிற்றுப் பிழைப்பைத் தானே பார்த்துக் கொள்ளும் நிலைமை வந்து சேர்ந்தது.

இந்தப் பரந்த உலகம் எவ்வளவு மோசமானது, அதில் எத்தனை பகுதி பணக்காரர்களின் காணிக்கை என்பதொன்றும் அஞ்சலைக்குத் தெரியாது. அவள் ஏழை. ஆனாலும் மனக்குறை ஏதுமின்றி இதுவரை வாழ்ந்து விட்டாள். தன் கணவனிடம் அவளுக்குக் குறைதான், அவனுடைய முரட்டுத்தனம் காரணமாக. ஆனால் அவனுடைய மற்ற குணங்களைப் புகழ்ந்து பேசிக் கொண்டே இருப்பாள்.

மிராசுப்பிள்ளை வீட்டில் அவளுக்கு வேலை கிடைத்தது. பாத்திரங்கள் துலக்குவது, தண்ணீர்த் தொட்டிக்கு நீர் முகந்து தருவது, துணி துவைப்பது — இதுதான் அவள் வேலை. கிடைத்த ஊதியமோ அவளுடைய தேவைக்கும் மேற்பட்டதாயிருந்தது. இரண்டு வேளையும் எஞ்சிய சாப்பாடு கிடைத்து விடும். இதைத் தவிர சம்பளம் ரூபாய் பத்து! பின் கேட்பானேன்?

ஆனால் அஞ்சலைக்கு மெதுவாக மிராசுப்பிள்ளையின் 'சொரூபம்' புரிய ஆரம்பித்தது. அடிக்கடி அவளை நோக்கி அவர் பல்லைக்காட்ட ஆரம்பித்தார்.

நாட்கள் ஓடின. மாரி அடிக்கடி அஞ்சலையிடம் வந்து குடும்ப நிலையை விசாரிப்பான். ஒரு தடவை சேலத்துக்குப் போயிருந்தபோது சிறைக்கூடத்தில் காளியைப் பார்த்தான்.

அவன் கல் உடைப்பதையும், ஆடை நெய்வதையும் பார்த்து விட்டு அழுதே விட்டான். இயற்கையாக மாரி பொல்லாதவன். ஆனால் அஞ்சலையிடம் ஏனோ அவனுக்கு எல்லைமீறிய அன்பு படர்ந்திருந்தது. அதற்குக் காரணம் அவனுக்கே புரியவில்லை. முதலில் அஞ்சலை அவனை வெறுத்தாள். பல் இளித்துப் பேசும் அவனிடம் அவளுக்குக் கோபம் வந்தது. ஆனால் தன் அன்பை வேறு விதத்தில் புலப்படுத்தத் தெரியாத 'அண்ணனா'க அவனை ஏற்றுக்கொண்டாள்.

மாலையில் வீட்டு வேலைகளை முடித்துவிட்டுக் களைப்புடன் வெளிப்புறம் வந்து உட்கார்ந்தாள் அஞ்சலை. அவளுக்கே வியப்பாயிருந்தது, அவள் இவ்வளவு நாள் தைரியமாக நாட்களைக் கடத்திவிட்டது! கணவன் சிறைக்குப் போய் எட்டு மாதம் இருக்கும். எப்போது திரும்ப வருவானோ?

"அஞ்சலை!..." என்ற குரல் கேட்டது.

"வாங்க, அண்ணே!......" என்று வரவேற்றாள் அவள்.

"ஏது, சமையலெல்லாம் முடிஞ்சிட்டுதா?......" என்று கேட்டபடி உட்கார்ந்தான் மாரி.

"ஆமாம், தொலையாத சமையல்......என்னவோ!" என்று அலுத்துக்கொண்டாள் அஞ்சலை.

மாரி ஒன்றும் சொல்லவில்லை. அஞ்சலை தன் தலையைக் கோதிக்கொண்டிருந்தாள்.

"உன் உடம்பு ரொம்ப இளைச்சிப் போச்சு, அஞ்சலை" என்றான் அவன்.

அவளுக்கு இதைக் கேட்க வெட்கமாயிருந்தது. "உடம்பு ஒரு கேடு!...சித்தரு பாடியிருக்காரு, சோத்தாலடிச்ச சுவருன்னு. இதைப்பத்தி என்ன?" என்றாள்.

"ஆமாமா. சித்தரு ரொம்பப் பாடியிருக்காரு. எனக்கு அவரு பாட்டுப் பூரா புடிக்கும். ஆனா காளி அண்ணன் இருக்குதே அதுக்குப் புடிக்காது."

"ஏன்?"

"அது சொல்லும்: வாழ்க்கைன்னா சுகமா இருக்கணும்டா, கபோதி. சும்மா அழுதுக்கிட்டுப் பரலோகம்னு கொட்டாவி விடப்படாது. இருக்கறவரை நல்லாச் சுகமா இருந்துட்டுச் சாவணும்னு."

"அது சரிதானே!"

"சரிதான்,—சரிதான். ஆனா இந்தச் சித்தரு 'மாங்காய்ப்பால் எதுக்கடி?' பாடியிருக்காரே, அதிலே..."

மாரி முடிக்கவில்லை. அதற்குள் தலையில் கட்டிய தலைப்பாகையுடன் அங்கே நுழைந்தார் மஞ்சியாபிள்ளை. அவரைக் கண்டதும் அஞ்சலை எழுந்திருந்தாள். மாரியும் துண்டை உதறியபடி நிமிர்ந்தான்.

"ஏலே, உனக்கு இங்கே என்ன வேலை?" என்று உறுமினார், பிள்ளை.

மாரி பதில் சொல்லவில்லை.

"சொல்லுடா" என்று சீறினார் அவர்.

"சும்மாப் பாத்துட்டுப் போவலாம்னு வந்தேன்" என்றான் மாரி.

"ஏண்டா, தனியா இருக்கற பொம்பளேயை என்னடா பார்வை?"

"மிராசையா, கண்டபடி பேசாதிங்க, ஆமாம்..."

"என்னடா முறைக்கிறே, தலையைச் சீவிடுவையோ!..." என்றார் பிள்ளை கோபமாக.

கீறிவிட்ட புண்ணிலிருந்து கிளம்பும் குருதிபோலக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது மாரிக்கு. அசாதாரண நிலை வந்தால் அவனேயும் அறியாமல் கோரமாகச் சிரிப்பது அவன் இயல்பு. இப்போதும் அப்படியே சிரித்தான். "ஐயா, உங்க மூளைக்கு வேறு எதுவும் எட்டாது. முண்டாசு கட்டிக்கிட்டு இந்த வேளேயிலே உங்களுக்கு மட்டும் இங்கே என்ன வேலே?... உங்க மூஞ்சிதான் பளிச்சினு தெரியுதே, தலையை மறைச்சா மட்டும் போதுமா?" என்றான்.

மஞ்சியாபிள்ளை உறுமினர். "நான் ஏன் வந்தேன்னு கேக்கிறியா? உன்னேக் கண்டுபிடிக்கத் தானடா மடப்பயலே!" என்றார்.

"என்னத்தைக் கண்டுபிடிச்சுட்டீங்க?" என்று கேட்டான் மாரி இளக்காரமாக.

இந்த விவாதம் அஞ்சலையை உள்ளூற வருத்தியது. மாரிமீது அவளுக்குக் கடுகளவும் சந்தேகமில்லே. இல்லாவிடில் அவனே அணுகவே விட்டிருக்க மாட்டாள். மேலும், அவன் இது வரை அவளிடம் வித்தியாசமாகவும் நடக்கவில்லே. ஆனால் மிராசுப்பிள்ளை மீது அவளுக்கு உண்மையிலேயே சந்தேகம் இருக்கத்தான் இருந்தது. பேச்சை மேலும் வளரவிட விரும்பாமல் அவள் இடைமறித்து, "பண்ணேக்காரரே, இது எங்க சொந்த விசயம். மாரி அண்ணனே நீங்க தப்பா நெனேக்கிறீங்க, ஆமாம்" என்றாள் வெடுக்கென்று.

அவளே ஆச்சரியத்துடன் பார்த்து நின்ற பிள்ளை, "அப்படியா சங்கதி?" என்றார் அதிசயம் பரவிநின்ற தொனியில்.

"ஐயா, உங்களுக்குப் பித்துத் தலேக்கேறிடிச்சி. இந்த மாதிரி விவகாரங்களேப் பார்க்காம, காணியிலே நெல்லுக்குப் பதிலா வாழை போட்டா லாபம் கெடைக்குமா, கரும்பு போட்டா லாபம் கெடைக்குமாங்கறதை யோசனே பண்றதை விட்டுட்டு நீங்க என் அனுவசியமாக மண்டையைக் கொளப்புக்கிறீங்க?" என்றான் மாரி.

"ஏலே, உன்னே என்ன செய்யறேன் பாரு...ஏ புள்ளே, நாளேயிலேயிருந்து நம்ம வூட்டுக்கும் வர வேண்டாம். நான் வேற ஆள் பாத்துக்கறேன். உங்க சங்கதி இத்தோடு போவாது. ஆமாம். ஞாபகமிருக்கட்டும். இந்த மஞ்சியா பிள்ளை யாருங்கறதைத் தெரிஞ்சிக்குவீங்க." என்று கூறி விட்டு வேகமாய் நடந்தார் மிராசு.

அவர் உருவம் மறைந்த பிறகு அஞ்சலே தரையில் உட்காரந்

தாள். ஒன்றும் தோன்றவில்லை அவளுக்கு. மாரி எங்கேயோ பார்த்தபடி சிறிது நேரம் நின்றான். அவனைப் பார்க்க முயலவில்லை அஞ்சலை. அவளுடைய மனதிலே மஞ்சியா பிள்ளையின் கோபம் அப்போதுதான் புது அர்த்தத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தது. நாளை முதல் அவர் வீட்டிற்கு வரக்கூடாது. அதன் பிறகு? அவள் பிழைப்புக்கு வழி?

மாரி அவளருகில் வந்தான். "அஞ்சலை!" என்று கூப்பிட்டான்.

அவள் அவனைப் பார்க்கவில்லை. வெட்கமாயிருந்தது அவளுக்கு; அவமானமாகவும் இருந்தது. ஒரு பெண் ஒரு ஆணுடன் தனித்துப் பேசுவது எவ்வளவு விபரீதத்தை உண்டுபண்ணுகிறது? நாளைமுதல் அவள் பிழைப்பு...?

"நீ கவலைப்படாதே. மிராசுப் பிள்ளை சமாசாரம்பூரா எனக்கு அத்துப்படி. அவனைச் சும்மா விடப் போறதில்லை" என்றான் மாரி.

அதைக் கேட்க அவளுக்கு அருவருப்பாயிருந்தது. மஞ்சியா பிள்ளை மீதுமட்டும் தான் தவறு? அவள் மீது கூடத் தான்! மாரி எந்த விதத்தில் நல்லவன்? ஊரில் அவனை எல்லோரும் வெறுத்தார்கள். போக்கிரிக்கு முதல் வெற்றிலைபாக்கு என்பதைப் போல, தன் வீட்டில் அவனுக்கு முதல் இடம் அளித்தது அவள் குற்றமே அல்லவா?

அஞ்சலை, கசப்பு மேலிட அந்த எண்ணத்தை மறைக்க முயன்றாள். வாழ்வு இத்தகைய சோதனைகள் நிறைந்ததென்று அவளுக்கு முதலிலேயே தெரிந்திருந்தால், மாரியை அண்டவிட்டிருக்க மாட்டாள். இப்போது மட்டும் என்ன? விஷயம் மீறிப் போகவில்லை.

"அண்ணே! ......" அவள் குரல் நடுங்கியது.

"என், அஞ்சலை!..." என்று கேட்டவண்ணம் மாரி உட்கார்ந்தான். அவள் பேச முயன்றாள். வார்த்தைகள் தொண்டைக்குள் அழுந்தின. "நீங்க இனிமே இங்கே வரப்படாது..." என்றாள் சிரமப்பட்டு.

மாரி அயர்ந்து விட்டான். "ஏன்?" என்று மட்டும் கேட்டான்.

அதற்கு அவள் பதில் பேசாமல் இருந்தாள். நிலவின் ஒளியில் கலங்கிய அவள் கண்களிலிருந்து கண்ணீர் நழுவிக் கீழே தரையில் விழுந்ததை அவன் கவனித்ததும், திடுக்கிட்டு அவள் முகத்தை நிமிர்த்தினான்.

அஞ்சலை திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தான் மாரி. "ஏன்?" என்ற கேள்வி அங்கே வட்டமிட்டது.

அவள் தலையை விடுவித்துக் கொண்டாள். "கூடாது...... ஆமாம். நீங்க வரக்கூடாது... வேணும்..." என்றாள்.

"இந்த மிராசுப் பிள்ளை வெறும் வெத்து வேட்டு, அஞ்சலை...நீ பயப்படாதே...

இந்த ஊரு பலது பேசும்... அதைப்பத்தி உனக்கென்ன?... எம்மேலே நீசந்தேகப்படறியா?'' என்று வினவினான் மாரி.

அஞ்சலை அவன் முகத்தை ஊடுருவிப் பார்த்தாள். அதில் முரட்டுத்தனத்தையும் மீறிய கருணையும் அன்பும் வடிந்து கொண்டிருந்தன. அவளுக்கு மேலும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது!

மாரி அவளைச் சமாதானப் படுத்தினான். தலையை வாஞ்சையுடன் வருடினான். கடைசியாக, "நல்ல பொண்ணு நீ! படுத்துத் தூங்கு, போ! மனதை அலட்டிக்காதே, நான் போகிறேன்...'' என்று கூறிச்சென்றான் மாரி.

அஞ்சலை படுத்தாள். ஆனால் தூங்கவில்லை.

●

மறுநாள் அஞ்சலைக்குக் காய்ச்சல் அடிக்க ஆரம்பித்தது. குளிரும் சேர்ந்து அவள் உடலை வாட்ட ஆரம்பிக்கவே, மாரி டாக்டரை வரவழைத்துக் காண்பித்தான். வேளா வேளைக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கும்படி தன் மனைவியைக் கட்டாயப்படுத்தினான்.

எல்லாவற்றையும் ஊர் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தது. இதைத் தவிர அதற்கு வேறு என்ன வேலை? பலவிதமான கதைகள் உலவலாயின. சிறையிலிருக்கும் காளியை 'ஆயுள் கைதி' யாக்கி விட்டுத் தான் வாழப் போவதாக மாரி அஞ்சலைக்குச் சபதம் செய்ததாகச் சிலர் பேசினார்கள். மற்றும் சிலர் மிக ரகசியமாக மஞ்சியாபிள்ளைக்கும் அஞ்சலைக்கும் தொடர்பு உண்டு என்று பேசினர்.

அஞ்சலை கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள். பாவம், உடல் மெலிந்து குச்சிபோல ஆகிவிட்டிருந்தது.

"படுத்துக்க, அஞ்சலே. நீ உடம்பை அலட்டிக்கப்படாது, டாக்டர் சொல்லியிருக்காரு'' என்று மாரி கஞ்சியை அவளிடம் கொண்டு வந்தான்.

கஞ்சியைக் கண்டாலே அவளுக்கு வெறுப்பாய் இருந்தது. இருந்தாலும் என்ன செய்வது? வாங்கி ஒரு வாய் குடித்துவிட்டு டம்ளரை அவனிடமே நீட்டினாள். பிறகு கண் இருண்டு வருவதுபோல் இருந்தது. சாய்ந்துவிட்டாள்.

நல்லவேளை! மாரி சட்டென்று அவளைத் தாங்கிக் கொண்டான். இல்லையேல் அவள் கீழே விழுந்திருப்பாள்.

அவள் தலையைத் தன் மார்பில் தாங்கியபடி மாரி என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கும்போது அங்கே ஒரு புது உருவம் நுழைந்தது. அது வேறு யாருமில்லை; சிறையிலிருந்து விடுபட்டு வந்த காளி அங்கே நின்றான்.

ஊருக்குள் நுழைவதற்கு முன்பே காளிக்குத் தகவல்

ஓரளவு எட்டிவிட்டது அந்த 'ஊர்' வாயிலாக! அதற்கேற்றாற் போல மிராசுப்பிள்ளையும் அவனிடம் 'கதை' திரித்துச் சொல்லிவிட்டார். வீட்டிற்குள் நுழையும்போது மாரியின் மார்புடன் அணைந்தவாறு அஞ்சலை கிடந்த காட்சி அவன் கோபத்திற்குத் தூபமிட்டது.

'மாரி இப்படி அடுத்துக் கெடுப்பான் என்று நினைக்கலையே' — மனசில் குமுறினான் காளி. மறுகணம், "டேய் மாரி!" என்று கர்ஜித்தான்.

மாரி அவனைக் கண்டதும் அப்படியே மகிழ்ந்து போனான். இனி அஞ்சலைக்குக் கவலைவிட்டதல்லவா? ஆனால் மறுகணம் அவனுக்குக் கலவரம் ஏற்பட்டது. அஞ்சலை தன் வசமிருந்த நிலையைக் கண்டு காளி சந்தேகப்பட்டால்...? அவன் விழித்தான்!

"என்னடா பார்க்கிறே?... நாயே, நீ ஒரு மனுசனா? உனக்கு வெக்க மில்லே?... நானும் நீயும் பளகின சிநேகத்துக்கு இதுதானடா நீ செய்யிரது?" என்று அலறினான் காளி.

மாரி அவனிடம் என்னவோ பேச முயன்றான். அப்போதுதான் அஞ்சலை விழித்துப் பார்த்தாள். அவளுக்கு எதுவும் தோன்றவில்லை. கண் முன் மங்கிய ஒளியில் மஞ்சியாபிள்ளை தான் நிற்கிறார் என்று எண்ணிக் கொண்டாள். அவளுக்குப் பயமாயிருந்தது. மாரியை இறுகத் தழுவிக் கொண்டாள்.

"சீ களுதே, உன் புத்தியும் இப்படியாயிடிச்சா?" என்று கதறியபடி அவளைப் பிடித்து இழுத்துத் தள்ளினான் காளி. 'ஆ'வென்று அலறியபடி அவள் தூரப்போய் விழுந்தாள்.

மஞ்சியாபிள்ளையும் 'என்ன நடக்கிறது?' என்று பார்க்க அங்கே வந்து சேர்ந்தார்.

அடுத்து நடந்ததுதான் யாவரையும் கலங்க வைத்தது. காளி ஒரே வேகத்துடன் மாரிமீது பாய்ந்து கத்தியால் கழுத்தில் குத்திவிட்டான்; தரையில் ரத்தம் பீறிட்டது.

மஞ்சியாபிள்ளை அலறியபடி வெளியே வந்தார். வந்த வேகத்தில் தாழ்ந்த கூரையின் மூங்கில் விட்டம் பலமாக அவர் தலையில் தாக்கவே ரத்தம் பீறிட்டது; மயங்கி விழுந்தார்.

போலீஸ் வந்தது. காளி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். தான் களங்கமற்றவள் என்பதை நிரூபிக்க அஞ்சலையின் உயிர் அங்கு நிற்கவில்லை; மாரியின் உயிரும் பிரிந்தது! ஆனால் இந்தக் களங்கத்தை ஏற்படுத்திக் கடைசிவரை ஒரு குடும்பத்தைப் பாழ்செய்த மஞ்சியாபிள்ளை தன் தலையில் ஏற்பட்ட புண்ணைக் குணப்படுத்திக் கொள்ளப் பிரபல டாக்டரை நாடிச் சென்னை போய்ச் சேர்ந்தார்.

காளி மீண்டும் சிறைபுகுந்தான்.

நியாயந் தானா?

வி. துரைசாமி

அவன் : மூந்தாநாள் அந்தியிலே குடஞ்சு மந்து
முன்னிருட்டுப் பரவுதற்குள் நீர்மு கந்து
வந்தாயே, அப்போது குடல்தெ றிக்க
வடக்கிருந்தே ஓடிவந்தேன் உன்னைக் காண;
பந்தாகப் பறந்துவிட்டாய்! வேண்டுமென்றே,
பாவைபுன்றன் கண்களில்நான் படக்கூ டாதா?
சிந்தாத அழகினிலே மயங்கி நிற்கும்
சீமான்என் உயிர்சிந்தச் சிரிப்பா யோநீ?

அவள் : அத்தான்!நீ எந்நிலையை அறிய வில்லை,
அருங்காதல் அத்தனையும் குறைந்து போமோ?
வித்தாரக் கவிதன்னில் சுவையை மட்டும்
வேறாகப் பிரித்திடவும் வல்லார் உண்டோ?
பொத்தானைப் போடாமல் விசிறி சுற்றப்
புகுந்திடுமோ? பைத்தியம்போல் புகல வந்தீர்!
மத்தாலே தயிர்கடையும் மார்க்கம் வேண்டாம்!
மாதென்னை மணம்புரியும் வழியைக் காண்பீர்.

அவன் : ஏழையெனும் மதிற்சுவரால் தடுக்கப் பட்டேன்!
எழிலுருவும் கலையறிவும் இருந்தென் செய்ய?
தோழமையைச் செல்வமெனும் அளவு கோலால்
தொட்டளந்து மதிப்பிடுவார் நிறைந்தா ரெங்கும்!
பாழுமுளம் நின்மீது காதல் கொண்ட
பாவமதை எண்ணுங்கால் பதறிப் போவேன்!
ஆழமது காணாமல் காலை விட்ட
அருங்குற்றம் என்மீதே அழகென் செய்கை!

அவள் : வேழத்தைக் கண்டுபுலி வெருண்ட தில்லை!
வெற்றியுமே கொள்ளுவதை விளக்க வேண்டாம்
வாழவகை தெரியாமல் வதங்கி மாய்தல்
வண்டமிழின் வழிவந்தோர் வழக்க மில்லை!
தோழமையைக் குறைகூறித் துயரால் மாழ்கித்
துடித்திடுதல் உங்கட்குக் குறைவே யன்றோ?
யாழதனை அமுதாக்கும் வண்ணம் பெற்றேன்
யாரெனினும் யாழ்க்கென்ன? அதுதா னுண்மை.

அவன் : அமுதொத்த சொல்லென்னும் வெல்லப் பாகில்
அறிவினையே குழைத்தளிக்கும் ஆர ணங்காய்!
நமதொத்த காதலுக்கு நாச மில்லை
நாள்தோறும் வளர்ச்சியுறும் என்று னுந்தான்
சமயத்தை எதிர்நோக்கிச் சலித்தேன் இந்நாள்!
சற்றேனும் இனிப்பொறுத்தல் சாலா தம்மா!
இமயத்துக் கரும்பாறைக் கிளகுந் தன்மை
எங்கேனுங் கண்டதுண்டோ? இயம்புவாயே.

அவள் : சிந்தனைக்குச் சக்தியுண்டு; கலக்க மின்றிச்
செயலாற்றப் புகுவீரேல் வெற்றி யுண்டு.
விந்தையல்ல எனைமணத்தல்! வீரம் மிக்க
வித்தகரே! தளர்ச்சிதனை விடுப்பீர் இன்றே
எந்தவிதம் என்றாலும் என்பெற் றோர்கள்
இசையும்வகை பணிபுரிவேன் இன்று தொட்டே
வந்தவழி திரும்பிடுவீர்! வருத்தம் வேண்டாம்
வாகையினைச் சூடிடவே வழிவ குப்பீர்!

அவன் : கற்கண்டோ! வெல்லமோ! கரும்பின் சாறோ!
கனிரசமோ! தீம்பாலோ! எனஇந் நேரம்
சொற்கொண்ட செவியிரண்டும் சோகங் கொள்ளச்
சொக்குமுன தழகினிலே பதிந்த கண்கள்
நிற்குநிலை தடுமாறி நடுங்கி நீரை
நித்திலம்போல் சொரிந்திடவே நீயும் செல்வாய்!
நெற்குவியல் தனைப்பிரிந்த களத்தைப் போல
நெடுமூச்சு விடுகின்றேன் நியாயந் தானே?

நமக்குள்ளே

சுகி

5

கிராமத்துப் பக்கமாகப் போன சமயம் நான் திடுக்கிட்டுப் போனேன்; அங்கே நாற்றுப் பறித்துக் கொண்டு ஏதோ பாடினார்கள்; களைவெட்டுகிறவர்கள் பாடினார்கள்; வயல் அறுவடை நாளிலும் பாட்டுக் கேட்டிருக்கிறேன். சுண்ணாம்பு இடிக்கும் பெண்களின் பாட்டு, மாடு மேய்க்கும் சிறுமிகள் கழல் விளையாட்டுப் பாடல், ஏற்ற இசை— இவ்வாறு அவர்கள் தொழிலோடு, இசை இடம் பெற்றிருக்கிறதை உணர்ந்தபொழுது, இன்றுள்ள தொழில்களில் இசைக்கு இடமே இல்லையென்பது நன்கு புலனாகிறது.

முன்னாளில் இசை பிறந்ததின் ரகசியம்? அவசரமற்று ஆற அமர வேலை பார்க்கும் பாக்கியம் உள்ளவர்களாக இருந்திருக்க வேண்டும். இன்றைய வாழ்வு அவசர வாழ்வு; அவசரத் தேவை. இன்று கடன் கேட்பவர்கள் கூட 'ரொம்ப அவசரம்' என்று கேட்கிறார்கள். அந்த நாளில் 'எனக்கு அடுத்த வருஷம் ஆயிரம் தேவைப்படும்' என்றே சொல்லுவார்கள். இன்றைய உலகத்தைப் போன்று அடுத்த நிமிஷ விவகாரம் எதிலும் கிடையாது. மெஷின் வந்ததில் எத்தனை அநுகூலங்கள் இருந்தாலும் பேச்சுக்கும் இசைக்கும் முற்றுப்புள்ளி விழுந்திருக்கிறதைப் பார்க்கலாம். இன்று நகர்ப்புறங்களில் சேர்ந்து பாடுவாரும், இசையில் மயக்கம் கொள்ளுவாரும் வெகு சிலரே. சில தொழில்கள் இசைக்கு விரோதிகளாக இருக்கின்றன. உழவர்களுக்கு, உழு தொழில் ஜீவனம், இசைப்பாடல் பொழுதுபோக்கு. கை அறுவடை செய்யச் செய்ய வாய் பாடுவது போன்று, பணம் லேவாதேவி செய்கிற போதும், ரயில்வேயில் டிக்கட் கொடுக்கும் போதும், ரேஷன் சிப்பந்திகள் அரிசி அளக்கும் போதும் ஏன் பாடக்கூடாது?

* * *

வாழ்வு கலைமயமாக இருந்தது அந்தக் காலம்; வாழ்வு கொலைமயமாக இருப்பது இந்தக் காலம்.

* * *

தொல்லையும் சிரமமுமுள்ள வேலையுள்ளவர்களுக்கு நல்ல பொழுதுபோக்கு அவசியம். சிலர் உடற்பயிற்சியைச் சொல்லுகிறார்கள்; ஒரு சிலர் விளையாட்டைச் சிபாரிசு செய்கிறார்கள். பிரயாணம், தனிமை இவைகளை ஊக்கப்படுத்துபவர்களும் இருக்கிறார்கள். நாலு பேரோடு அரட்டை அடித்தலை உபதேசம் செய்பவர்களும் இருக்கிறார்கள்.

இதில் கவனிக்கவேண்டிய அம்சம் மாறுதல்.

பார்த்துக் கொண்டிருக்கும் வேலைக்குப் புறம்பானது பொழுதுபோக்கு. விவசாயிக்கு மீன்பிடித்தல் பொழுதுபோக்கு. புறாப் பந்தயம், ஆட்டுக்கடாச் சண்டை, முயல் வேட்டை முதலியன பொழுதுபோக்குகள். படித்தவர்கள், நாகரிகமான பட்டணங்களில் அகப்பட்டுக் கொண்டவர்களுக்கு; திறந்த வெளியில் காற்று வாங்குவது பொழுபோக்கு. மூளை வேலையில் ஈடுபட்டவர்களுக்கு, உடல் உழைப்பும், உடல் உழைப்பில் ஈடுபட்டவர்களுக்கு மூளை வேலையும் பொழுதுபோக்காக் கிடைத்தால் மிகவும் நல்லது.

* * *

எழுத்தளவில் அறிஞனாக இருப்பது எளிதான செயல். வாழ்க்கையில் அறிஞனாக இருப்பது அப்படி எளிதான செயலன்று.

* * *

நம்மிடையே இருசாரார் இருக்கிறார்கள். வேலையே வாழ்வின் குறிக்கோள்; இன்பமே வாழ்வின் குறிக்கோள் — இப்படி நம்மில் பலர் இருக்கிறோம். சிலருடைய வேலையில் இன்பம் கலந்திருக்கும். கலையம்சம் நிறைந்தவர்கள் வாழ்க்கையே இதற்கு எடுத்துக்காட்டு. இப்படி வேலைக்குள்ளாக இன்பம் கிடைத்தாலும் இவை தவிர நல்ல பொழுதுபோக்கு வேண்டும். டிராம் கண்டக்டர் ஒருவர் தகரத்திலே கோலடப்பாக்கள் செய்வதை அறிவேன். என்ஜின்

திறந்த வெளியில் காற்று வாங்குவது —

டிரைவர் தமது பொழுதுபோக்காக நாடகத் திரைச் சேலைகள் எழுதுவார். என்ஜினியர் தமது பொழுதுபோக்காகக் கதை எழுதுவார். கதை எழுதுகிறவர் காமிரா கைக்கொள்ளுவதையும் நான் அறிவேன். பேராசியர் ஷாவுக்குக் காமிரா துணை; சர்ச்சிலுக்குச் சுருட்டும் ஓவியம் தீட்டுவதும்; நேருவுக்குக் காஷ்மீர் பிரயாணம், குழந்தைகளோடு விளையாடுதல் பொழுதுபோக்கு.

* * *

சில அறிஞர்கள் பொழுதுபோக்குக்காக அரசியலில் புகுந்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரையும் உடலையும் வதைக்கிறார்கள். பிறருக்குத் துன்பம் தரும் பொழுதுபோக்கு முள்ளில் ரோஜா அல்ல; அது சப்பாத்திக்கள்ளியின் வளர்ச்சி.

* * *

சித்திரம் வரைதல் மிகவும் உயர்ந்த பொழுதுபோக்கு. வர்ணங்கள்—அப்பப்பா எத்தனை, எத்தனை நிறங்கள்! பச்சையில் தான் எத்தனை பாகுபாடுகள்? கிளிப்பச்சை, இலைப் பச்சை, பாசிப்பச்சை, சகுந்தலா பச்சை,

சிலருக்குச் சித்திரம் வரைதல்...

என்று எத்தனை நிறங்கள் உலகில் இருக்கின்றன! மாவிலை, சம்பாப் பயிர், மருதாணி, மருக்கொழுந்து எல்லாம் பச்சை நிறங்கள் என்ற வட்டுக்குள் வரலாம். மனிதனின் அங்க அவயவங்கள் அடையாளங்களில் மாறுபடுகிற மாதிரி, இலையின் பச்சை நிறங்கள் விந்தைவிந்தையானவை.

இயற்கையின் வர்ணங்களைப் பென்சில், பிரஷ் இவைகளில் தீட்ட முடியும் என்றால் அது பெரிய நாடகம்; குணச் சேர்க்கை எழுத்தில் பதிக்கும் நாடகம். வர்ணச்சேர்க்கைகள் ஓவியமாகப் பிரதிபலிக்கும் நாடகம். ஸ்வரக் கோலங்கள் இசையாகப் பிரதிபலிக்கும் நாடகம். கலையை அண்டினவனுக்கு எப்போதும் அருகே துணைவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

* * *

தொழில் இல்லாத நாடு சுடுகாடு. கலை இல்லாத நாடு பாலைவனம்.

* * *

எப்போதும் ஒருவன் வாழ்வில் இன்பமும் செல்வமும் குவிந்து விட்டால் அவனுக்கு ரசிக்காது. சூரிய ஒளிமட்டும் உள்ள நாடு பாலைவனம் ஆகிவிடுவதுபோல; மழை இல்லாவிட்டால் வாழ்வு போச்சு. மழையும் வெயிலும் உள்ளபோதில் 'வானவில்' தோன்றுகிறது. வானவில்லைப் போல வாழ்வின் பல வர்ணங்களைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டுமானால், துன்பமும் இன்பமும் நிரவி வரவேண்டும். வெற்றி மட்டும் கண்டவன் கடின சித்தமுள்ளவனாக இருக்கிறான். வெற்றியுடன் ஏழ்மையை யுணர்ந்தவன் இரக்கச் சித்தம் உள்ளவனாக இருக்கிறான், பெரும்பாலும்.

* * *

வாழ்க்கையில் அனுபவிக்க இயலாத, விரும்பாத சுகதுக்கங்களை இலக்கியத்தில் கண்டும் கேட்டும் பார்த்தும் நாம் திருப்தியடைகிறோம்.

* * *

'புத்தகங்களை என்ன செய்வதென்று தெரியவில்லை' என நண்பரொருவர் சொன்னார். ஏகப்பட்ட நல்ல புத்தகங்கள். நூலாம்படையடைந்து எல்லாம் புதைபொருள்களாகக் கிடந்தன. இவ்வாறு நூல்களை அள்ளிப் போட்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். புத்தகங்களைப் படிக்காவிட்டாலும் அடுக்கிவைப்பது நலம். தொட்டாலே கை மணக்கும்; துடைத்தால் நூல் மணக்கும். ஏதாவது ஒரு வரியைப் படியுங்கள். பிறகு

அடுத்த பக்கம். பிடிக்காமற் போனால், அடுக்கில் வைத்து விடுங்கள். மனத்திற்குகந்த மாதிரி அடுக்காக வைத்தாற் போதும். அப்புத்தகங்களில் என்ன இருக்கிறது என்று தெரியாமற்போனாலும், அந்தப் புத்தகம் எங்கே இருக்கிறது என்று தெரிந்தாற்போதும். உங்களோடு நெருங்கிப் பழகும் நண்பர் மாதிரி இருக்க வேண்டியவை புத்தகங்கள்; இல்லையென்றால் அறிமுகமான புதிய உறவினர் மாதிரியாக வாவது நடத்தக்கூடாதா?

* * *

புத்தகத்தின் மேலுள்ள காதல் இருக்கிறதே அதுதூய்மையானது; மற்ற இன்பங்கள் மங்கிய காலத்தும், பிரகாசமாக இருக்கும்; மற்றப் பொழுதுபோக்குகள் இயலாத காலத்தும் ஊன்றுகோல் போன்று கைகொடுக்கும்.

* * *

இளமையிலேயே சிறந்த நூல்களைப் படித்து விட்டோமென்று நினைப்பது தவறு. வயதுக்குத் தகுந்த மாதிரி உயரிய நூல்கள் இன்பம் தரும். கவிதைகள் சிறுபிள்ளையில் சந்தத்தோடு இனிமை தருவன. வயதானதும் சாறும் சக்கையும் தெரியும்; பண்பாடு அறியக் கூடும். மீண்டும் பார்க்க வேண்டுமென்று சிலரது அழகு, விளம்பரம் செய்வதுபோல, சிறு நூல்கள் மீண்டும் படிக்கப் படிக்க ரசமாக இருக்கும். இளம் வயதுடையவர்கள் படிக்கும் நூல்களில் கவனம் செலுத்த வேண்டும். வயதான

மற்றும் சிலருக்கு மாத்திரைகள்......

வர்கள் சாப்பாட்டில் அதிகக் கவனம் செலுத்துவது நமக்குத் தெரியும். மனம்போனபடி அவர்கள் உண்டால் அஜீர்ணம் அடைவார்கள். அதனால் உண்ணுவதை நன்கு மென்று உண்ணுவார்கள். வயதானவர்களுக்கு அதிகமாக மென்று உண்ணுவது நல்லது; இளைஞர்களோ படிப்பதை ஜீரணித்துக் கொள்ளும் தன்மையில் படிக்க வேண்டும்.

தட்டுமுட்டுச் சாமான்களுக்குள் அழகுமயமானவை புத்தகங்கள்; ஒரு வரி பயன்படாமல் இருந்தாலும் அதிலும் ஓர் அழகு.

நம்முடைய நாட்டில் பத்து வயதுவருவதற்குள் எத்தனை மொழிகளைச் சொல்லிவைக்க முடியுமோ அத்தனையையும் திணிக்கிறார்கள். பிறமொழிகள் குழந்தையின் உடல் உள்ளம் இரண்டும் வளர்ச்சியடையாமல் தடுக்கும் சக்தி வாய்ந்தவை. ஆங்கிலத்தில் நோபல் பரிசு பெற்ற தாகூர் தமது இங்கிலீஷ் வாத்தியார் வரவைக் கண்டதும்

என்ன பாடுபட்டார் என்பதைப் படிப்பவர்கள் உணரலாம். தாய்மொழிக்கு அப்பால் எதைப் படித்தாலும் அதனிடம் மாற்றாந்தாய்க்குணம் இருக்கும். பிறமொழியை என்னதான் அனுபவித்தாலும் தமிழின் இனிமையை அனுபவிப்பது போன்று அனுபவிக்க முடிவதில்லையே!

சட்டைப்பையில் இட்டுக் கொண்டு போகும் பூந்தோட்டத்தின் பெயர் புத்தகம்.

பொழுது போக்காக இன்னொரு மொழி அவசியம் தெரிந்திருக்கவேண்டும். வயலின் வாசித்தல்தொழிலாக இருந்தால், அவர் வீணையைப் பொழுதுபோக்காக வைத்துக் கொள்வது மிகவும் நல்லது. அதே தொழிலின் மற்றொரு பகுதியே பொழுது போக்காகக் கிடைப்பது பாலில் தேன் கலந்த மாதிரி. வாய்ப் பாட்டுக்காரர் மிருதங்கம் போன்ற ஒரு கருவியைப் பொழுதுபோக்காகக் கொள்வதும், விறகு உடைப்பவன் கட்டில்பின்னுவது, பழ வியாபாரி பந்தாடுவது, இப்படி ஏதேனும் பொழுதுபோக்கு அவசியம். எனக்கு ஆங்கிலம் படித்தல் பொழுது போக்கு; தமிழ்ப் படித்தல் ஜீவனம்.

என் நண்பர்களில் சிலர் எப்படி இருக்கிறார்கள்? அரிசி, கோதுமை, கேழ்வரகு, சோளம் தின்றுகொண்டு இருக்கிறார்களா? பாட்டில்களில் விற்கப்படும் மருந்துகள் தங்கள் ஆயுளைக் கெட்டிப்படுத்திப் பீமசேனனாக மாற்றும்; சோளத் தட்டையாக மாற்றும் என நினைத்துக்கொண்டு வாழ்கிறார்கள். 'தேக்கரண்டி மருந்துகளை' உண்பது அவர்கள் ஜீவனம்; மாத்திரைகள், பில்லைகள் விழுங்குவது பொழுதுபோக்கு. மருந்துகளின் தரம் நரம்புகளுக்குப் போதையூட்டித் துடிக்கச் செய்வது; அல்லது நரம்புகளுக்கு உணர்ச்சியைக் குறைத்துப் பலம் குன்றச்செய்வது—இதை வைத்திய நிபுணர்களே சொல்லுகிறார்கள்.

டாக்டர்களுக்குப் பொழுது போக்குத் தருபவர்கள்நோயாளிகள்; ஜீவனம் தருகிறவை நோய்கள்.



யாருக்கு உங்கள் வாக்கு?



***எவர் ஒருவர் வள்ளுவர் வகுத்த செந்நெறியில் செல்கிறாரோ, 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று சாதி வேற்றுமை களைய முற்படுகிறாரோ, 'யாதும் ஊரே—யாவரும் கேளிர்' என்ற பெருநோக்குடன் நோக்குகிறாரோ, 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்; வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்ற சீர்திருத்தக் கொள்கை உடையவரோ, 'எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் இந்நாட்டு மக்கள்' என்று மக்களை மானிடர்களாகக் கருதி நடக்கிறாரோ, அவருக்கே—அத்தன்மானத் தமிழர்க்கே என் வாக்கு.

ஜோசப்-ஜே. விக்டர்
அண்ணாமலைநகர்

★

மனிதனை மனிதனாக எண்ணி மனிதனைச் சாமிஎன்று அழைக்க முன்வராத தன்மானமுள்ளவனாகவும், மதத்தைக் காட்டி மக்களை மிருகமாக்க எண்ணாதவனாகவும், கல்லைக் கடவுளெனக் காட்டி அறியா மக்களை ஏமாற்றும் எத்தர்களை ஒழித்துக்கட்ட உறுதி கொண்டவனாகவும், தமிழகத்தில் தமிழனை ஏமாற்றித் தங்கள் வாழ்வை வளமாக நடாத்தும் புல்லர்களைப் பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டவனாகவும், விதவையின் வேதனையைத் தீர்த்துப் பெண்களின் முன்னேற்றத்தை விரும்புகின்றவனாகவும் இருந்தால் என் வாக்கைத் தர விரும்புவேன்......ஆனால் நான் மேலே குறிப்பிட்ட என் எண்ணங்கள் ரமண மகரிஷியின் பரம்பரையினருக்கு தோன்றாது. காந்தியின் வாரிசு என்று வாய்ச்சம்பம் அடிக்கும் சுயநலக்காரர்களுக்குப் பிடிக்காது. நாட்டிற்கு உழைத்து உருக்குலைந்துபோன சாக்ரடீஸ், அமானுல்லா, லிங்கன், கமால் போன்ற புரட்சி வீரர்களின் பாதையில் செல்வோருக்குத்தான் என் எண்ணம் பிடிக்கும். ஆகவே அத்தகையவர்களுக்கே என் வாக்கை அளிப்பேன்!

எஸ். வி எஸ். கண்ணகி
மீனாக்ஷிபுரம்

★

செங்குட்டுவனின் இனப்பற்றும், நெடுஞ்செழியனின் வீரமும், இளங்கோவடிகளின் முத்

*** ரூபாய் மூன்று பரிசுபெற்ற கடிதம்.

தமிழ்ப் புலமையும், வள்ளுவரின் அரசியல் அறிவும், பெருஞ்சேரல் இரும்பொறையின் தமிழ்ப் பற்றும் கொண்ட, புதிய தமிழகத்தின் சிறப்பு என்றென்றும் அழியாவண்ணம் தமிழ்நாடு தனிநாடு ஆவதற்கு எவ்வித இன்னல் வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தியாகம் செய்யத் தேர்தல் என்னும் பாதையில் செல்லுகையில், "கல்லடியா? கவலைப்படாதே! சொல்லடியா? சோர்வுபடாதே! பகைவரின் படையா? பயப்படாதே! சதியா? அதனைச் சாகடி! எதிர்க்கட்சியா? ஏமாந்துவிடாதே!" என்ற அண்ணாவின் பொன்னுரைகளை மனதில் வைத்துக் கொண்டு, தேர்தலில் நிற்கும் எந்தத் தியாகிக்கும் என் உயிர் போன்ற வாக்கை மனப்பூர்வமாக வழங்குவேன்.

"நாதன்"
கரூர்

★

சங்கம் வைத்து மொழி வளர்த்தோன் தமிழன். அதற்குப் பங்கம் நேரில் அகில உலக அங்கங்கள் அழியும் என்ற உறுதியுடன் 'கூறுக்கவேண்டாம் பாரத மாதா'வை எனக் கூறும் பக்தர்களுக்கும், அவர்கள் பக்கமேளங்களுக்கும் பாடம் கற்பிக்கும் அளவிலே 'இந்நாட்டிற்குப் பண்டைப் பெயர் திராவிடம்; நாங்கள் பண்டைத் திராவிடத் தனயர்கள்' என்று தலைநிமிர்ந்து சொல்வோனுக்குத்தான் என் வாக்கு!

அரசியலிலே 'மார்க்ஸை'க்கு இடங்கொடுத்து, மானசீக வாழ்வு வாழத்தன்னைக் கூறுக்கக் கூரான வாளும் வேலும் தம் மேடையின் அடியிலே இருக்கின்றன என்று தெரிந்தும், தீரத்துடன் சொற்பொழிவாற்றிய 'லெனின்' இனத்தவன் நான் என்று எந்த 'ஸ்டாலின்' கூறி அதன்படி பணியாற்ற விரும்புகின்றானோ அவனுக்குத்தான் என் வாக்கு!

'நட்டாற்றிலிருக்கும் நலிந்த நாட்டின் நலமெண்ணி வாழ்வேன். என் நாட்டைப் பொன் விளையும் நன்னாடாக்குவேன். வெளிநாட்டான் கைக்கூலிக்காக கற்பை, நாட்டை இன்னபிறவற்றை விலைபேசும் புல்லுருவிகளின் பூண்டை அழிப்பேன்' என்று எந்த 'ஜோன் ஆப் ஆர்க்' கூறுகிறாளோ அந்தப் பெருமகளிர்க்குத்தான் — அந்த நச்செள்ளையாருக்குத்தான் என் வாக்கு!

"சந்திரா"
சென்னை

★

'நாடு—உலகம்,' இவை இரண்டையும் வலக்கண்ணாகவும், இடக்கண்ணாகவும், உள்ளத்தை மக்களின் ஊழியனாகவும் மாற்றிக் கொண்டுவரும் ஆணாயினும் சரி; பெண்ணாயினும் சரி—அவர்களுக்கே என் வாக்கு. வாக்குமட்டிலுமல்ல, அவர்களின் நடைமுறை திட்டங்களுக்கு உழைப்பு சக்தியுங்கூட!

து. ரா. ராமாநுசம்
திருப்பத்தூர்

List of 1st Prize winners of C. No. 59. (1) S. S. Narayana, Vizag (2) N. Motilal, Calcutta. (3) Y. B. Gupta, Simla. (4) S. B. Sri Vatsva, Barabankk. (5) P. C. Gounder, Coimbatore. (6) K. M. S. Chettiar, Chittoor. (7) Purushotham, Raigarh. (8) C. G. Pillai, Bombay. (9) P. R. Khan, Chittoor. (10) K. A. P. Abdulla, Ramnad. (11) M. J. Paul Tinnevelly. (12) S. Imam, Khaiar Rd. (13) M. Bose, Purnea. In addition one person is awarded 2nd prize; 15 III rd prize and 4 persons V prize.

Full particulars are published in the Rainbow dated 10—10—51

ரிஜிஸ்டர் நெ. 249 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 61

M/S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY B. NO. 59 *81 TO 96-354

84	85	89	96
94	91	87	82
95	90	86	83
81	88	92	93

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions No.* 59 on 3/9/51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramamurthy 28/9/51.

Agent, Madras.

முடிவு தேதி 27-10-51 விடை 12-11-51

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

362

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 83 முதல் 98 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 362 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு **RAINBOW** மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. 61

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

வளரும் இலக்கியம்

விக்டர் ஹியூகோவின் 'லெமிரபிளே' என்னும் உயிரோவியத்தைப் படித்தபோது ஒவ்வொருவரும் தமிழிலே இப்பெருங் காப்பியத்தைக் காணமுடியுமா என்று ஏங்கியதுண்டு. அந்த ஏக்கத்தைச் சுத்தானந்த பாரதியார் ஓரளவு போக்கினார். ஏழை படும் பாடு அவரது சிருஷ்டி. குறை முற்றும் போக்கும் பணியில் தோழர் வேலனின் கைதி நாடக உருவிலே தமிழுலகிற்குத் தரப்பட்டுள்ளது.

நம் நாட்டிற்கு ஏற்ற முறையிலே கதைத் தலைவன் வீரப்பனின் பண்புகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஹியூகோவின் பாதிரிக்குப் பதில் இங்கும் ஒரு பௌத்த ஞானி வருகிறார். மொட்டையடித்து, காவியணிந்த பௌத்த ஞானியாக இல்லாமல், எந்நேரமும் அன்பு மொழி பேசி, அமைதி தவழும் அகமுக மலர்ச்சியுடன் ஓர் அன்பானந்தர் வருகிறார். இடையிடையே சூறாவளிக் கருத்துக்கள் பின்னணியாக அமைந்து நிற்க, கருத்தோட்டம் சிறிதும் தடைப்படாமல் கதையோட்டம் விறுவிறுப்பாக அமைந்திருக்கிறது. நடிப்பதற்கும் படிப்பதற்கும் எளிய இனிய நடை.

தழுவல் என்ற குறையைத் தவிர, மற்ற குறையேதும் கூறமுடியாது. இன்றைய சமூகத்தின் தெள்ளத் தெளிந்த படப்பிடிப்பு—காலக் கண்ணாடி. உருக்குலைந்து, உள்ளங்குலைந்த 'கைதி' ஆசிரியரின் அரிய சாதனை!

மக்களுக்கு மராட்டிய வீரன் சிவாஜியைப் பற்றித் தெரியும். ஆனால் அந்த மலை எலியின் நிழல், மணிமுடி தரிக்க வேண்டிய மகன் சாம்பாஜியைப் பற்றி அதிகம் தெரிந்திருக்காது. சரித்திரத்தில் உள்ள சிறு குறிப்புகளை வைத்துக்கொண்டு, சாம்பாஜியின் முழு வரலாற்றை ஓரளவு ஆசிரியர் தந்திருக்கிறார். சாம்பாஜியின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சில சரித்திர முக்கியத்துவம் பெற்ற சம்பவங்கள் இந்நாடகத்தில் காணப்படாவிட்டாலும், மேடைக்கேற்ற விதமாக இடையே ஆடல் பாடல், காதல் என்ற சிங்காரங்கள் புகுத்தப்பட்டு விறுவிறுப்பாக நாடகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்ப முதல் இறுதி வரை ஒரு உண்மையான மராட்டிய வீரனாகச் சாம்பாஜி சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். பலி பீடத்தில் நிற்கும் போதும் அவன் நெஞ்சு கொஞ்சமும் அஞ்சவில்லை. வீரம் விளக்கப்பட்டது போல, அவன் அழிவுக்கும் மராட்டிய மண்டலத்தின் சீர்குலைவுக்கும் எப்படி சாம்பாஜியே காமலோலனாக, கன்னியர் கால்

வருடி நிற்கும் கயவனுக, அரசின் அழிவுக்கு முதற்காரணனுக—அமைந்தான் என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார், அழகாக. 'கைதி'யைப்போல நடிப்பதற்குச் சாம்பாஜி உகந்ததல்ல; ஆனல் படித்து மகிழ்வதற்குரிய நல்ல நாடகம்.

கைதி, சாம்பாஜி: தீட்டியவர். எ. கே. வேலன். வெளியிட்டோர்: திராவிடன் பதிப்பகம், வேலூர். விலை முறையே ரூ. 1–4–0; 1–0–0.

இருளும் ஒளியும் ஒரு சுவையுள்ள படையல். தோழர் தில்லை வில்லாளன் நடையில் காணப்படும் புதுமை ஒளி வீசிப் படர்ந்துள்ளது நூல் முழுதும். பொன்னன் பேசும் போது, புத்தகத்தில் படிப்பது போலத் தோன்றவில்லை. சாதாரணத் தமிழ் மகன் ஒருவன் சராசரி ஞாபகத் திறமையைக் கொண்டு கடந்த கால வாழ்க்கை வரலாற்றைக் கூறினல் எப்படியிருக்குமோ, அது போலவே எளிய நடையில் இனிமையாக இருக்கிறது.

கருவிலிருந்து பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து, படித்து—பிறகு காதலித்து ஒளி வீசும் பொன்னனின் சரித்திரம் படிப்படியாக இருளிலிருந்து ஒளி நோக்கிச் செல்லுகிறது. இடையே ஒளிப் பிழம்பைத் தீண்டி, அதனை மாசு படுத்த முனையும் கிரகணங்கள் ஒன்றிரண்டு—தானுக மறைகின்றன—மீண்டும் ஒளி எழும்பக் காண்கிறோம்.

சுவை பயக்கும் வாழ்க்கை வரலாறுகளை எதிர்பார்ப்பவர்களுக்கு ஒரு நல்விருந்தாக நண்பர் தில்லை வில்லாளன் பொன்னனின் வாயிலாக ஒரு அனுபவ ஆசானின் வாழ்க்கைச் சுவடிகளை வடித்துத் தந்திருக்கிறார்.

இருளினிடையே இடர்ப்பட்டு இன்னலேற்று நிற்கும் ஏதுமறியாதவர்கள் மட்டுமல்ல—இன்னும் எண்ணற்றோர், ஒளியின் உச்சியில்உறைபவர்கள் ஆகியோரும் வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளைக் கற்கக் கருதுமிடத்து இருளையும் ஒளியையும் ஒருங்கே வாசிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஒன்றுகூட்டித் தந்துள்ளார் இருளில் ஒளியாக ஆசிரியர். அவர் தம் முன்னுரையில் அவாவுறுவது போலப் படித்து முடிப்போர் உள்ளச் சான்று இருளிலிருந்து ஒளிக்கு ஓடி வந்துவிட்டோம் என்றே உரத்த குரலில் கூறும்.

பெரிதும் விவசாயிகளால் நிரம்பப்பெற்ற ரஷ்யா ஜாரின் சாய்வுக்கு முன் இருபெரும் சக்திகளால் அலைக்கழிக்கப் பட்டது. ஒரு புறம் ஜார்; மறு புறம் ஜாரும், ஜாரின் சட்டங்களும், அவனது சர்வசாம்ராஜ்யங்களும் பணிந்து நிற்கும் பாமண்டலத் தூதுவன். மத மயக்கத்தில் மூழ்கிக்கிடந்த அந்நாள் மக்கள், மதத்தின் பேரைச் சொல்லி ஒரு உலக்கையை நிறுத்தினுலும் அதற்கு

மதிப்பும் மரியாதையும் செலுத்திவந்தனர். அந்தக் காலக் குருட்டு வாழ்க்கையின் கோர விளைவுகளை ரஸ்புடீன் கூறுகிறான்; ரஸ்புடீன் கதை கூறுகிறது; ரஸ்புடீன் கதை வாயிலாக நண்பர் அரங்கண்ணல் கூறுகிறார்.

மது, மாது, மன்னன்—இம் மூன்றுக்கும் மனுவாக அந்நாள் விளங்கினான் ரஸ்புடீன், சாதாரண மதக்குருவாகச் சரித்திரத்தில் இடப்பெற்ற அந்தச் சத்திய சீலன்!

வேல்விழி கூர் மழுங்கும்; அதிகார ஆர்ப்பாட்ட ஆரவாரங்கள் அவன் விழிகளுக்கு முன் அடிபணியும். அவன் மிரட்டினான், பணிந்தனர். அவன் அதட்டினான், அடங்கினர். ஆட்பட்டோரும் ஆள்வோரும் அவன் மொழிகளுக்கிருந்த மத வலிமையால் செயலற்றுக் கிடந்தனர். அவன் வாழ்வு ஒரு இன்பச் சுனை, அதிகாரக்கேணி, ஆணவக்கடல், கொடுமைப் பள்ளம்—அதில் வீழ்ந்தவர்கள் மீளவில்லை. மீந்தவர்கள் அவன் வாழ்வதை விரும்பவில்லை. ஆனால் அவன்—ரஸ்புடீன் ஒரு சாதாரணக் கள்ளனல்ல, காமுகனல்ல, கூண்டேற்றிக் குறை கூறித் தண்டித்து விடக்கூடிய கயவனல்ல. மதகுரு! பரமண்டலத்தின் பிரதிபிம்பம்! அவனை நெருங்குமுன் ஏமாந்த மக்களின் ஆத்திரம் எரித்து விடும், எதிர்த்தோரை! எனவே மடமை வாழ்ந்தது; போக போக்கியங்கள் துளிர்த்தன; அராஜக அட்டூழியப் பட்டியல் வளர்ந்தது. இவற்றிடையே ரஸ்புடீனும் வாழ்ந்தான், வாடா மேனியர் வாழ்ந்தவரை—ஜாரின் கோல் தரையில் சாயும் வரை. ஜார் சாய்ந்தான்; அவன் கொடுங்கோல் சாய்ந்தது; கன்னக்கோல் ஏந்திகள், கள்ளர்கள், கயவர்கள், காமுகர்கள் சாய்ந்தனர். ரஸ்புடீனும் அவனுடைய பண்டாரப் பரிவாரங்களும் நாடெங்கும் ஊரெங்கும் வேட்டையாடப் பட்டனர். மதமாசு நீங்கிய மக்கள் புது வாழ்வு பெற்று எழுந்தார்கள்.

அங்கொன்றும் இங்கொன்று மாகச் சரித்திரத்திலே மறைக்கப்படாது காணப்படும் ஒரு சில குறிப்புகளை அடிப்படையாக வைத்து, காட்சிகளைக் கற்பனைக் கண்ணால் படம் பிடித்து, உள்ளமும் உணர்வும் ஒருங்கே இசைவுறும் வண்ணம் எளிய, இனிய, ஒவிய நடையில் அரங்கண்ணல் ரஸ்புடீன் காவியம் வரைந்துள்ளார். எல்லோரும் என்றும் படித்துப் பகுத்தறிவைச் சாணை தீட்டிக்கொள்ள உகந்த நூல்.

இருளும் ஒளியும்: தீட்டியவர் தில்லைவில்லாளன். ரஸ்புடீன்: வரைந்தவர் இராம அரங்கண்ணல். வெளியிட்டோர்: திராவிடப்பண்ணை, தெப்பக்குளம்—திருச்சி. ஒவ்வொன்றும் விலை ரூ. 1—8—0.

—நாஞ.

அழகான கேசத்திற்கு
பிரஸிடெண்ட்
வெஜிடபிள் ஹேர் ஆயில்
உபயோகிக்கவும்.

RATHOD TRADING CO. SOWCARPET MADRAS-1

பொன்னி

சந்தா விவரம்

	ஒரு ஆண்டு	ஆறுமாதம்
இந்தியா, இலங்கை	ரூ. 6—0—0	ரூ. 3—0—0
பர்மா, மலேயா முதலிய வெளிநாடுகள்	ரூ. 6–12—0	ரூ. 3—6—0

எவரெடி கன்பெக்ஷனரி ஒர்க்ஸ்
நிறுவனம் 1942ஞு

உயர்ந்த ரக மிட்டாய் தினுசுகள்
சாஸ்திரிக முறைப்படி தயாரிப்பவர்கள்.
எங்களிடம் பாய்ல்டுகூட்ஸ் பான்கூட்ஸ், காரமல்ஸ்
லோஜென்சஸ் இன்னும் பலவகை மிட்டாய்கள்
மொத்தமாகவும் சில்லறை யாகவும் கிடைக்கும்.

விவரங்களுக்கு:
72, எல்லம்மன் கோயில் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை-17

1951 நவம்பர் முதல்

கலாசக்தி பிரசுர வாலிபர்
வெளியீடுகள் உதயம்!

1951 நவம்பரில் வருகிறது

காதல் நவீனம்
பளபளக்கும் மூவர்ண
அட்டை

★

விலை 12 அணா

★

கலாசக்தி பிரசுரம்

நேமத்தான்பட்டி P. O.
(Ramnad Dt.,)

காகா

தீப்பெட்டிகளை
உபயோகியுங்கள்

★

ஸ்ரீ காளீஸ்வரி
கலர் பேக் ஓர்க்ஸ்

சிவகாசி.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-
177801

Telegram: 'PUNT COMPANY'
Telephone: 55085

பண்ட் & கம்பெனி
(ESTD: 1890)

உறுதியான தோலினுல் அழகான சூட்கேஸ், மணிபர்ஸ், ஸ்லிப்பர்ஸ், சாண்டல்ஸ், பெல்ட் முதலியன நாங்கள் செய்கிறோம். உங்கள் தேவைக்கு எழுதுங்கள்.

PUNT & COMPANY
CHROME LEATHER WORKS
170, BROADWAY, G. T. MADRAS.

Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI Ltd., at PONNI ACHAKAM, 16, Sevi Amman Koil Street, Tondiarpet, Madras-2

சிந்தனை விருந்து

இலக்கியச் சந்தையில்	...	மு அண்ணாமலை ...	0 – 8—0
மதம் அவசியமா?	...	கட்டுரைகள் ...	0–12—0
வருங்காலத் தமிழகம்	...	அறிஞர் அப்பாத்துரை	0–12—0
சங்க இலக்கிய மாண்பு	...	,, ...	0 – 6—0
இந்திய மொழிச் சிக்கல் (ஆங்கிலம்)	...	,, ...	2 – 8—0
தபாலாபீஸ் விநோதங்கள்	...	க. சண்முகசுந்தரம் ...	0 – 8—0
பெரியாரும் கவிஞரும் அண்ணாவும்		எஸ். சதாசிவம் ...	0 – 8—0
முதலாளித்துவம் ஒழிக	...	,, ...	0–12—0
கார்ல்மார்க்ஸ்	...	,, ...	0–12—0
ஏழையின் அரசியல்	...	,, ...	0 – 8—0
அண்ணா யார்?	...	வழிப்போக்கன் ...	0 – 8—0

விற்பனையாளர்க்குக் கழிவு உண்டு. ரூ. 5-க்கு
மேற்பட்ட ஆர்டருக்குத் தபாற் செலவு இலவசம்.
விபரமான விலைப்பட்டியலுக்கு எழுதுக.

பொன்னி லிமிடெட் :: சென்னை-21

ஏன் கவலைப்படுகிறீர்கள்?

★

தங்கள் அச்சுவேலை எதுவாயினும் சரி, கலைப் பண்பு, புதுமை, உயர்வு திகழ அவற்றைத் திட்டமிட்டு முடிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள நாங்கள் காத்திருக்கிறோம்!

★

"பொன்னி அச்சகம், 16, சேணியம்மன் கோயில் தெரு, தண்டையார்ப்பேட்டை, சென்னை—21." என்ற விலாசம் உங்கள் நினைவுக் குறிப்பில் இருந்தால் போதும்!